

விடுகதைகள்
சிந்திக்க வைக்கும் புதிய விடுகதைகள்


Cinco De Mayo
விடுகதைகள்
அறிவு வளர புதிய விடுகதைகள்

# விடுகதைகள்



அறிவு வளர புதிய விடுகதைகள்

# விடுகதைகள்



விலை: ரூ. 30/-

வெளியிடுவோர்:

ஸ்ரீ பாலா ஆப்செட் காலண்டர்ஸ்

சிவகாசி - 626 123.

வேது பாரம் புண்பக்கும் விடுகை

# முன்னுரை

விடுகதைகள் சிந்திப்பதற்காகவே உருவாக்கப்பட்டவை, சிறு குழந்தைகள் கதைகள் கேட்பதில் ஆர்வம் உள்ளவர்கள். அவர்களிடம் கதை சொல்வதோடு மட்டும் அல்லாமல் அதன் முடிவில், கதை சம்பந்தப்பட்ட ஒரு வினா எழுப்பினால் அவர்களது சிந்தனைத்திறன் வளரும். அந்த வழியில் உருவானவைதான் இந்த புதிர்கள், குழந்தைகளுக்கு ஒரு பொருளை நேரடியாகச் சொல்லாமல், மறைமுகமாக அதன் தன்மையைச் சொல்லி 'அது என்ன?' என்று கேட்கும் பொழுது அந்த பொருளையும் அதன் தன்மையும் அவர்கள் மனதில் ஆழமாக இடம் பிடித்துவிடும். அதற்காகவே நம் நாட்டு பாரம்பரியத்தில், நமக்கு முன்னால் வாழ்ந்த சான்றோர்களால் உருவாக்கப்பட்டன.

இன்றைய கால கட்டத்தில், விஞ்ஞான வளர்ச்சியின் வாயிலாக எத்தனையோ மீடியாக்களும். பொழுது போக்கு அம்சங்களும் பெருகி விட்ட நிலையில் புத்தகங்கள் நல்ல கருத்துக்களையும் சிந்தனைகளையும் குழந்தைகளுக்கு கொடுத்து வருகின்றன. இந்த விடுகதை புத்தகம் அப்படியொரு நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதுதான்.

விளையாட்டு என்றால் குழந்தைகளுக்கு பிடிக்கும், அதுவும் புதிர் விளையாட்டு என்றால் தனி குஷிதான். "எங்கே! இப்பொழுதே உங்கள் அருகில் இருக்கும் குழந்தைகளுடன் இந்த புதிர் விளையாட்டை ஆரம்பியுங்களேன்"



1. தந்தைக்கு முன்னே தரணியில் நிற்பார் யார்?
**பிள்ளையார்.**

2. அடிக்காமலே பிள்ளை அலறித் துடிக்குது அது என்ன?
**சங்கு.**

3. அன்ன நடை நடந்தாலும் அதிரும் தலைப்பகுதி அவன் யார்?
**யானை.**

4. அடித்தால் அழுவான், பிரித்தால் சிரிப்பான், அது என்ன?
**தேங்காய்.**

5. அவன் வருவான், தெரியும், எப்போ போவான் எங்கே போவான் தெரியாது, அவன் யார்?
**புகை.**

6. அர்த்த ராத்திரியில் ஆட்டம், அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம் ?
**மழை.**

7. அந்தி வரும் நேரம், அவள் வரும் நேரம், யார் அவள்?
**நிலா.**

8. அவள் பாடகி, ஆனால் அவள் பெண் அல்ல?
**குயில்.**

9. அம்மா சப்பை, மகள் உருண்டை, அது என்ன?
**அம்மிக்குழவி,**

10. அறைகளோ அறுநூறு, அத்தனையும் ஒரே அளவு, அது என்ன?
**தேன்கூடு.**

11. அரக்கன் தலை அந்தரத்தில் தொங்குது, அது என்ன?
**திருஷ்டி பூசணி.**

12. அள்ளவும் முடியாது, கிள்ளவும் முடியாது
**காற்று.**

13. அள்ளலாம் கிள்ள முடியாது
**தண்ணீர்.**

14. அம்மா கொடுத்த தட்டில் நீர் ஒட்டவில்லை அது என்ன?

**தாமரை இலை.**

15. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம் அது என்ன?

**வளையல்.**

16. அடிமலர்ந்து நுனி மலராத பூ

**வாழைப்பூ.**

17. அரையடிப் புல்லில் ஏறுவான் இறங்குவான்

**பேன்.**

18. அண்டாவில் அண்டா என்ன அண்டா?

**மச்சாண்டா.**

19. அம்மைக்கு அதிசாரம் பிள்ளைக்கு தலை சுற்றல்

**இயந்திரம்.**

20. அத்தானில்லா அத்தான் என்ன அத்தான்?

**முடக்கத்தான்.**

21. அத்தையில்லா அத்தை என்ன அத்தை?

**சித்திரத்தை.**

22. அத்துவானக் காட்டிலே ஒரு துளி ரத்தம்

**தம்பலப்பூச்சி.**

23. அந்தரத்தில் தொங்குவது செம்பும் தண்ணீரும்

**இளநீர்.**

24. அறுக்க உதவாத கதிருக்கு அரிவாள்

**பிறைச்சந்திரன்.**

25. அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாதை

**வகிடு.**

26. அடைமழை பெய்த அடுத்த நாள் படை, படையாய் வந்தது பரங்கி நாட்டு விமானம், அது என்ன?

**ஈசல்.**



27. அஞ்சு விரல் அமர்ந்தாட, பத்து விரல் புந்தாட சூரியனுடன் வாதாட எமனுடன் போராட அது என்ன?

**வரட்டி.**

28. அம்மா புடவையை மடிக்க முடியாது, அப்பா பணத்தை எண்ண முடியாது?

**வானம்,விண்மீன்.**

29. அவ்வப்போது நிரம்பலாம், மொத்தமாக நிரம்ப முடியாது?

**வயிறு.**

30. அரைச் ஜாண் ராணி, அவளுக்குள்ளே ஆயிரம் முத்துக்கள்

**வெண்டைக்காய்.**

31. அரிசி பணத்துக்கு ஒரு படி, ஆக்கித் தின்ன ஆள் இல்லை

**உப்பு.**

32. அரக்குப் பட்டு, அழகான பட்டு, கண்பட்டு கலங்குதப்பா சின்னப்பட்டு அதுஎன்ன?

**பட்டுப் பூச்சி.**

33. அநேகக் கொடியும் பூவும் இருக்கும், ஆனால் செடி அல்ல

**ரூபாய் நாணயம்.**

34. அடே புடே என்பான், வீட்டை விட்டுப் போக மாட்டான்,

**நாக்கு.**

35. அடிஅடி என்று அடித்து, உரி உரி என்று உரிப்பது எது?

**புளியம்பழம்.**

36. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது

**தண்ணீர்.**

37. அறை நிறை நாற்காலி அது என்ன?

**நாற்காலி.**

38. அவனைத்தொடுவானேன், ஆபத்தை அணைப்பானேன் அது என்ன?

**மின்சாரம்.**

39. அடா என்றால் உள்ளே போவான் அவன்யார்?

**<u>நாக்கு.</u>**

40. அனைவருக்கும் அடங்காதது, ஆதவனுக்கு அடங்கும்

**<u>குளிர்.</u>**

41. அரைக் கீரைச் சிறுபாத்தி, அழகு உண்டு மணம் இல்லை

**<u>பச்சை குத்தல்.</u>**

42. அனலிலே பிறப்பாள், ஆகாயத்திலே பறப்பாள்

**<u>புகை.</u>**

43. அரியகுடி பெரியாத்தா, அவள் கெட்டிக்காரி, பால் கொடுக்காமல் பிள்ளை வளர்ப்பாள்

**<u>கோழி.</u>**

44. அன்றாடம் மலரும், அனைவரையும் கவரும்

**<u>கோலம்.</u>**

45. அம்மா தந்த தட்டிலே தண்ணீர் ஊற்றினால் நிற்காது

**<u>தாமரை இலை.</u>**

46. அவிழ்த்து விட்ட மாடு, படுத்து விட்டது. அது என்ன?

**<u>கயிறு.</u>**

47. அதிர் புதிர் போட்ட பொன்னன் தாய்க்கு முதுகிலே முந்நூறு அடி

**<u>சல்லடை.</u>**

48. அவிழத்து விட்ட மாடு, தொற தொறன்னு கழியுது

**<u>நெற்கதிர்.</u>**

49. அது ஓர் அழகு தேவதை, ஆடி வரும் தேவதை

**<u>மயில்.</u>**

50. அலறி அலறிக் கூப்பிடுவான், அசந்தால் அடங்கி விடுவான்

**<u>தொலைபேசி.</u>**

51. அதோ ஓடுகிறான் ஒருவன், அவன் காலடி தெரியவில்லை

**<u>ஈ.</u>**



52. அத்தாயக் காட்டுக்குள்ளே, ஐயா குடைபிடிக்கிறார்

**<u>சோளக்கதிர்.</u>**

53. அட்டைக் கரிப் பெண்ணுக்கு, உச்சந்தலை மஞ்சள்

**<u>பனங்காய்.</u>**

54. அண்ணனைக் கண்டால் கோபம், தம்பியைக் கண்டால் சிரிப்பு

**<u>சூரியன், சந்திரன்.</u>**

55. அடிக்காத பிள்ளை, அலறித் துடிக்குது

**<u>சங்கு.</u>**

56. அண்ணன் தோட்டத்திலே பச்சைப் பாய் விரித்திருக்கிறது

**<u>கீரை.</u>**

57. அச்சுவண்டி ஓடுவதேன்? அக்காள் கணவன் மச்சான் ஆனது ஏன்?

**<u>அக்காளை முன்னிட்டு.</u>**

58. அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான்

**<u>மிருதங்கம்.</u>**

59. அகன்ற வாய் உடையவர், திறந்த வாய் மூடாதவர்

**<u>செக்கு.</u>**

60. அடித்தாலும் ஓடாது சண்டிமாடு, குத்தினாலும் சாகாது நொண்டிமாடு

**<u>வீடு.</u>**

61. அக்காள் வீட்டில் விளக்கு ஏற்றினாள், தங்கை வீட்டில் தானே எரியும்

**<u>கொடியடுப்பு.</u>**

62. அடி சிவப்பு, நடு பச்சை, உச்சி வெள்ளை, அந்த கதை என்ன?

**<u>வெங்காயச் செடி.</u>**

63. அந்தரத்தில் ஒரு தொட்டில் அது என்ன?

**<u>தூக்கணாங் குருவிக்கூடு.</u>**

64. அந்தரானக் காட்டிலே நாலுபேர் நனையாமல் நிற்கிறார்கள் அவர்கள் யார்?

**<u>பசுவின் மடி.</u>**

65. அவன் கழற்றிய சட்டையை அடுத்தவர் போட முடியாது

**பாம்பு.**

66. அலறிக்கொண்டு வருவான். அவனைக் கண்டால், அத்தனைபேரும் வழிவிடுவார்கள், அவன் யார்?

**ஆம்புலன்ஸ் (மருத்துவ ஊர்தி).**

67. அடிப்பார் பிடிக்க மாட்டார் அது என்ன?

**பாம்பு.**

68. அறிவின் மறுபெயர் இரவில் வருகிறது அது என்ன?

**மதி.**

69. ஆகாயத்தில் பறக்கும், அக்கம் பக்கம் போகாது அது என்ன?

**கொடி.**

70. அண்ணனும் தம்பியும் விர்ரென்று போகிறார்கள், அது என்ன?

**வடக்கயிறும். வால் கயிறும்.**

71. அடிக்காட்டில் நடு மாட்டில், நுனி வீட்டில் அது என்ன?

**நெல்.**

72. அரைப்படி அரிசி பொங்கி ஆயிரம் பேர் உண்டு, அரைச்சட்டி மிச்சம் அது என்ன?

**சுண்ணாம்பு.**

73. அழகழகாய் பூப்பூக்கும், அம்மாடின்னு அழவைக்கும் அது என்ன?

**நெருஞ்சி முள்.**

74. அன்றாடம் தீப்பிடிக்கும் அழகிய மாளிகையில் அறுசுவை விருந்து தயாராகும், அது என்ன?

**அடுப்பு.**

75. அடிக்கடி தாவுவான், அரசியல்வாதியல்ல அவன் யார்?

**குரங்கு.**

76. அள்ளக் குறையாது, குடிக்க உதவாது அது என்ன?

**கடல் நீர்.**



77. அவனிடம் ஆயிரம் முடிச்சுகளும் உண்டு, ஆயிரம் ஓட்டைகளும் உண்டு, அவன்யார்?

**கயிற்றுக் கட்டில்.**

78. அரசமரம் தூங்க, ஆலமரம் தூங்க, அவனியெல்லாம் உறங்க அவன் ஒருத்தன் மட்டும் உறங்கவில்லை, அவன் யார்?

**மூச்சு.**

79. அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்?

**பந்து.**

80. அக்கா போகும் போது அடிமணலில் பட்டாணி அது என்ன?

**ஆட்டுப் புழுக்கை.**

81. ஆற்றில் அலையுது தம்பி, அழுக்கெல்லாம் விழுங்குவது தம்பி

**மீன்.**

82. அரைச்சாண் குள்ள தூக்கு, கால் சாண் தொப்பி அது என்ன?

**பேனா.**

83. அறை நிறை நாற்காலி அது என்ன?

**பற்கள்.**

84. அன்னம்மா அழுதது எதனாலே, அறைக்குள் வெளிச்சம் அதனாலே, அது என்ன?

**மெழுகுவர்த்தி.**

85. அங்கே போறான், இங்கே வாரான், அடியைப் பார்த்தா தெரியலே

**எறும்பு.**

86. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி, வாலினால் நீரை வற்றக் குடிக்குது, அது என்ன?

**விளக்குத்திரி.**

87. அடுக்கி வைத்த அழகு சிற்பங்கள் அடி விழுந்தால் அழகு போகும் அது என்ன?

**பற்கள்.**

89. அடிபட்டவன் அழுதால், அதுவே ஆனந்த ராகம் பலருக்கு

**மேளம்.**

90. அவனியெல்லாம் தூங்க அவன் மட்டும் தூங்கவில்லை, யாரவன்?

**கடல்.**

91. அக்கா தங்கை உறவுண்டு, அண்டை வீடுண்டு, கிட்ட வந்தாலும் தொட்டுக் கொள்ள முடியாது, அது என்ன?

**கண்.**

92. அருகருகே அண்ணன் தம்பி, ஆனாலும் ஆயுள்வரைசேரமாட்டார்கள்

**ரெயில் தண்டவாளம்.**

93. அக்காள் வீட்டுக்கு தங்கை போகலாம், தங்கை வீட்டுக்கு அக்காள் போக முடியாது, அது என்ன?

**படி உழக்கு.**

94. ஆளில்லாத வீட்டு வாசலில் அவன் மட்டும் அமர்ந்திருப்பான்

**பூட்டு.**

95. ஆள் இல்லாத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது

**துடுப்பு.**

96. ஆடாமல் பாடுவான், அசையாமல் பேசுவான், அவன் யார்?

**ரேடியோ.**

97. அழுவேன், சிரிப்பேன் அனைத்தும் செய்வேன், நான் யார்?

**முகம் பார்க்கும் கண்ணாடி.**

98. ஆடும் வரை ஆட்டம் ஆடியபின் ஓட்டம், அது என்ன?

**இதயம்.**

99. ஆயிரம் பேர் வந்து சென்றாலும் வந்த சுவடு தெரியாது?

**எறும்பு.**

100. ஆடி ஓடித் திரிந்து அடங்கிப் போன பின்னாலே, நாலு பேரு தோள் மேலே நகர்ந்து போகும் அது என்ன?

**பிணம்.**



101. ஆவணி பிறப்பது எதனால்? நாடகம் முடிவது அதனால்?

**ஆடி முடிவதால்.**

102. ஆழத்தில் புதைந்திருப்பான், வெளியே வந்தால் வெளிச்சம் தருவான், அவன் யார்?

**முத்து.**

103. ஆளில்லாத வீட்டில் கண்ணில் படுவான் அது என்ன?

**தூசி.**

104. ஆயிரம் கண் உண்டு, அசந்து தூங்க இடம் உண்டு, அது என்ன?

**நார்க்கட்டில்.**

105. ஆயாள் வீட்டுத் தோட்டதிலே, மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது

**எலுமிச்சம் பழம்.**

106. ஆனை விரும்பும் சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும், அது என்ன?

**கரும்பு.**

107. ஆடி அசைந்து வருது, அடியில் சிந்தி வருது, கூடிய பெண்கள் கூந்தலை ஆட்டி வருது

**திரிகை.**

108. ஆதவன் உதித்தால் மறைந்திடும், ஆயிரம்விளக்கை அணைத்திடும்

**இருள்.**

109. ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே பச்சைப் பாம்பு தொங்குகிறது

**புடலங்காய்.**

110. ஆண்டுக்கு ஆண்டு, அழகழகாய் உருமாறி வரும்

**காலண்டர் (நாட்காட்டி).**

111. ஆள் இறங்காதகிணற்றிலே மயில் இறங்கி நீர் குடிக்குது அதுஎன்ன?

**நீர் இறைக்கும் வாளி.**

112. ஆடாத அழகிக்கு, ஆடு என்று பெயர் வந்தது

**ஆடு.**

113. ஆயிரம் பணம் பெறும் குதிரைக்கு அது இல்லை, அண்ணன் மனைவிக்கு இது இல்லை,

**கொம்பு மீசை.**

114. ஆழ் கடலில் கிடைப்பவனுக்கு ஆயிரமாயிரம் பணமதிப்பு

**முத்து.**

115. ஆகாயத்தில் அரிவாள்கள் அது என்ன?

**புளியங்காய்.**

116. ஆள் ஏறாத மலையில், ஆயிரம் பூப் பூத்திருக்கு, அது என்ன?

**நட்சத்திரம்.**

117. ஆடும் வரை ஆட்டம் ஆடியபின் ஓட்டம், அவன் என்ன?

**இதயம்.**

118. ஆத்தாள் பிள்ளைத் தாச்சி, அப்பன் ஊர் சுற்றி, அது என்ன?

**பறங்கிக் கொடி.**

119. ஆடுவான், பாடுவான் ஆனால் நகர மாட்டான், அவன் யார்?

**மரம்.**

120. ஆடும்போது சீறும், ஆடிக் குடத்தில் அடையும் ?

**எண்ணெய்.**

121. ஆடி ஓய்ந்தபின் அம்மணி வருவாள் அவள் யார்?

**ஆவணி.**

122. ஆழ்கடலில மூழ்கிக் கிடப்பான், ஆனவரையில் ஒளியும் கொடுப்பான் அவன் யார்?

**முத்து.**

123. ஆற்றோரம் போகும் கிடாவுக்கு, கிள்ளிப் பிடிக்க மயிர் இல்லை

**ஆமை.**

124. ஆட்டி விட்டால் ஆடும், அந்தரத்தில் தொங்கும்?

**ஊஞ்சல்.**



125. ஆற்றில் அலையுது, அழுக்கெல்லாம் விழுங்குது அது என்ன?

**மீன்.**

126. ஆள் இறங்காத கிணற்றிலே, மரம் இறங்கி கூத்தாடுகிறது

**மத்து.**

127. ஆளில்லாத வீட்டில் கண்ணில் படுவான் அவன் யார்?

**தூசி.**

128. ஆனை போய் ஆறுமாதம், ஆய்தாரை அப்படியே இருக்கு

**வாய்க்கால்.**

129. ஆணை போடுகிறது தலை தெரியவில்லை அது என்ன?

**பரிசில்.**

130. ஆண்டுக்கு ஆண்டு வரும் வரி, அடுத்தடுத்து வரும் வரி, அந்த வரி அது என்ன?

**ஜனவரி. பிப்ரவரி.**

131. ஆத்தாள் சடைச்சி அப்பன் சொறின், நானே சர்க்கரைக் குட்டி

**பலாப்பழம்.**

132. ஆணையில்லா ஆனை என்ன ஆணை?

**முந்தானை.**

133. ஆலிலை உதிர்வதேன், இராவழி நடப்பதேன்?

**பறிப்பார் இல்லாமல்.**

134. ஆள் ஏறும் குதிரைக்கு அங்கமெல்லாம் கண்ணு

**கயிற்றுக் கட்டில்.**

135. ஆயிரம் பேர் கூடி வரும் அழகர் மலை

**தேர்.**

136. ஆள் இரண்டுக்கு, ஆசனம் ஒன்று

**கருவேல முள்.**

137. ஆகாரத்திலேயும் ஆகாரம் என் ஆகாரம்?

**நீராகாரம்.**

138. ஆறடி மனிதன் அதிர்ஷ்டத்தை கண்டிட அரைஅடி இடத்தில் அமைந்துள்ள கோடுகள் அது என்ன?

**கைரேகை.**

139. ஆற்றிலே பத்து மரம், அசையுது பிடுங்க முடியவில்லை

**விரல்கள்.**

140. இக்குணி பிள்ளைக்கு, துகுணி நாமம்

**உளுந்து.**

141. இரவில் தோன்றும், இருளை வெட்டும்

**மின்னல்.**

142. இரவல் கிடைக்காதது, இரவில் கிடைப்பது

**தூக்கம்.**

143. இரண்டு வீட்டுக்கு, ஒரு தண்டியம்

**மூக்கு.**

144. இத்தினியுண்டு சிட்டுக்குருவிக்கு, ஏழு முழம் சித்தாடை

**வெங்காயம்.**

145. இலை இல்லாத மரம், கல கல என்று ஆடுது பார்

**கைத்தறி.**

146. இறந்த மாட்டை அலற அலற அடிக்கிறான்

**மத்தளம்.**

147. இருட்டு வீட்டிலே, குருட்டு எருமை மேயுது

**பெருச்சாளி.**

148. இருட்டு வீட்டில் முரட்டு சிப்பாய்

**பூட்டு.**

149. இருட்டு அறையில் முரட்டுத் திருடன்

**குதிர்.**

150. இரண்டு குண்டு தோண்டினேன், ஒரு கம்பு நாட்டினேன்

**அகப்பை.**



151. இரவெல்லாம் பூங்காடு, பகலெல்லாம் வெறுங்காடு

**வானம்.**

152. இரத்தத்தில் வளர்வது, இரத்தம் இல்லாதது

**நகம்.**

153. இத்தனையுண்டு பூனைக்குட்டி, வைத்ததெல்லாம் சுமக்குது

**அடுப்பு.**

154. இங்கிருந்து பார்த்தால் இரும்பாய் இருக்கும், கிட்டப் போனால் தங்க நிறமாய் இருக்கும்

**பனம்பழம்.**

155. இரண்டு கிணறுக்கு ஒரு பாலம்

**மூக்கு.**

156. இரவிலே பிறந்த ராஜகுமாரனுக்கு தலையிலே குடை

**காளான்.**

157. இந்த ஓட்டம் நின்றால், எந்த ஆட்டமும் இல்லை

**இரத்த ஓட்டம்.**

158. இடி, இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது, அது என்ன?

**பட்டாசு.**

159. இரவு பகல் விழித்திருக்கும், எப்போதும் ஒலித்திருக்கும்

**கடிகாரம்.**

160. இவ்வளவுண்டு ராமனுக்கு, அவ்வளவு பெரிய நாமம்

**உளுந்து.**

161. இலையைப் பறித்தான் ஒருவன், கொதிக்க வைத்தான் இன்னும் ஒருவன், ஆஹா என்ன ருசி என்றான் அடுத்தவன், அது என்ன?

**தேயிலை.**

162, இரைச்சலோடு செல்லும் விமானம் அல்ல, இடியோசை தரும் வானம் அல்ல, அது என்ன?

**வான வெடி.**

163. இரண்டு தோட்டம் நான்கு வேலி, பூப்பூத்தால் பூந்தோட்டம் பாழ்

<u>**கண்.**</u>

164. இதயம் போல் துடிதுடிக்கும், இரவு பகல் விழித்திருக்கும்

<u>**கடிகாரம்.**</u>

165. சிட்டுக்குருவி, இழுத்து இழுத்து முள்ளடைக்குது

<u>**ஊசி.**</u>

166. இவர்கள் நேரடியாகவே நடமாடுவார்கள், அவர்கள் யார்?

<u>**செருப்பு.**</u>

167. சிற்றுண்டி, வயிற்றைப்பிதுக்கிக்கினு செத்தாண்டி

<u>**நெல்.**</u>

168. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை

<u>**இதயம்.**</u>

169. இலையுண்டு கிளை இல்லை, பூ உண்டு, காய் இல்லை

<u>**வாழை.**</u>

170. இரவில் பயமுறுத்தும் முட்டைக் கண்ணனுக்குத் பகலில் கண்ணு தெரியாது, அவன் யார்?

<u>**ஆந்தை.**</u>

171. இருந்தாலும், இறந்தாலும், பறந்தாலும் இறக்கை மடக்காதது எது?

<u>**தட்டாம்பூச்சி.**</u>

172. இரு கைக்கு ஒரு வளையல், இழுத்து மாட்டும் பெரும் வளையல்

<u>**கை விலங்கு.**</u>

173. இரவில் சுமந்திடுவான், பகலில் சுருண்டிடுவான்

<u>**பாய்.**</u>

174. இந்த ஊரில் அடிபட்டவன், அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுவான்

<u>**தந்தி.**</u>

175. இத்தினி இத்தினி மண்ணைக்காரன், ஊரெல்லாம் சண்டைக்காரன்

<u>**தீக்குச்சி.**</u>



176. இதுவரையில் இல்லாதது, எப்போதும் இருப்பது, யாரும் பாராதது அது என்ன?

<u>**நாளையதினம்.**</u>

177. இந்தக் கரை இல்லாவிட்டால் வாழ்க்கை முழுவதும் இன்பமயம் தான், அந்த கரை என்ன?

<u>**அக்கரை.**</u>

178. இட்டேன் எடுக்க முடியவில்லை, பூசினேன் புட முடியவில்லை

<u>**கோலம். மஞ்சள்.**</u>

179. இங்கிருந்து பார்த்தால் இங்கிலீசுக் கோட்டை, புட்டுப் புட்டுப் பார்த்தால் புளியங்கொட்டை

<u>**கற்றாழைக்காய்.**</u>

180. இருவர்க்கு மேலும் இருவர், துணை அவர்கள் யார்?

<u>**கண், கண்ணாடி.**</u>

181. இருபுறமும் காடு, நடுவிலே ரோடு, அது என்ன?

<u>**தலைமுடி, வகிடு.**</u>

182. இருப்பது இரண்டு கால், ஓடுவது குதிரை வேகம், இறகுகள் உண்டு பறக்காது, அது என்ன?

<u>**நெருப்புக் கோழி.**</u>

183. இருந்த இடத்தில் இருந்தபடியே ஆட்டம், இதில் சிலருக்கு கொண்டாட்டம், சிலருக்குத் திண்டாட்டம் அது என்ன?

<u>**சீட்டாட்டம்.**</u>

184. இவன் இருக்கும் இடத்தில் யாரும் இருக்க முடியாது, அவன் யார்?

<u>**ஒட்டை.**</u>

185. இருட்டு வீட்டுக்குள் முரட்டு கிடா, அது என்ன?

<u>**பத்தாயம்.**</u>

186. இரண்டே தோளில் முத்து வரும் அது என்ன?

<u>**பூண்டு.**</u>

187. இரு கண்கள் தோண்டி ஒரு கம்பை நட்டேன் அது என்ன?

**அகப்பை.**

188. இவன் அழுதால் தான் உலகம் சிரிக்கும் அவன் யார்?

**189வானம்.**

190. இரவெல்லாம் கூவும் கோழி எது?

**கவர்கோழி.**

191. இரண்டு குதிரைகள் மீது ஒரு ராசா, அது என்ன?

**மிதியடி.**

192. இருட்டில் கதை பேசுவான், அவன் யார்?

**திரைப்படம்.**

193. இவன் இருந்தாலும் தொல்லை, இல்லையென்றாலும் தொல்லை அவன் யார்?

**சூரியன்.**

194. இருந்த இடத்தில் இருந்தபடியே சேதிகள் பறிமாற உதவுவான்?

**தபால் பெட்டி.**

195. இவர்கள் இருவரும் சேர்ந்தால் ஒரு தலை உருளும், யார் அவர்கள்?

**கத்திரிக்கோல்.**

196. இருட்டில் கண்சிமிட்டும் நட்சத்திரம் அல்ல அது என்ன?

**மின்மினிப்பூச்சி.**

197. இங்கிருந்து பார்த்தால் இரும்புக் குண்டு, எடுத்துப் பார்த்தால் இனிய பழம், என்ன பழம்?

**விளாம்பழம்.**

198. இரட்டைக்குழல் துப்பாக்கி, தோட்டா இல்லாமலே வெடிக்கும் எப்போதாவது, அது என்ன?

**மூக்கு. தும்மல்.**

199. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?

**தேள்.**



200. இரத்தம் குடித்தே, சிவந்தவன் அவன் யார்?

**மூட்டைப்பூச்சி.**

201. இந்த மானால் நடக்க முடியாது எந்த மான்?

**அந்தமான்.**

202. இவர் விடாமல் குறட்டை விட்டால் தான் நாம் நிம்மதியாக தூங்கலாம், இவர் யார்?

**ஏ. சி. மிஷின்.**

203. இனிப்பு பொட்டலத்திற்கு எண்ணாயிரம் பாதுகாவலர்கள்

**தேன்கூடு.**

204. இரண்டு கையுண்டு, நான்கு காலுண்டு, ஆனால் மிருகமில்லை

**நாற்காலி.**

205. இரட்டைக் கிளையில் ஒற்றை ஓணான் அது என்ன?

**இரயில்.**

206. இரட்டையாய் பிறந்தவர்கள், ஒருத்தி மேலே ஏறினாள், ஒருத்தி கீழே இறங்குவாள், அது என்ன?

**தராசு.**

207. ஈர்க்கு போன்ற தம்பிக்கு பந்துபோல தலை அது என்ன?

**தீக்குச்சி.**

208. ஈட்டிகள் பாதுகாப்பில் இளவரசி தலையில் அமர தப்பி வருவாள்

**ரோஜா.**

209. ஈட்டி படை வென்று காட்டு புதர் கடந்தால் இனிப்போ இனிப்பு

**பலாப்பழம்.**

210. உரசினால் போதும், உயிர் முடிந்து போகும் அது என்ன?

**தீக்குச்சி.**

211. உங்கள் அக்க குளித்தும் கருப்பு, எங்க அக்கா குளிக்காமல் சிவப்பு அது என்ன?

**கரி, நெருப்பு.**

212. உருண்டைத் தலையனுக்கு உடம்பெல்லாம் மஞ்சள் போர்வை
**எலுமிச்சம்பழம்.**

213. உதைக்கத் தெரிந்தவனுக்கு உழைக்கவும் தெரியும் அது என்ன?
**கழுதை.**

214. உணவை எடுப்பான், ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?
**அகப்பை.**

215. உயர மரத்திலே உச்சாணிக்கிளையிலே தொட்டில் கட்டி ஆடுது?
**தூக்கணாங்குருவி.**

216. உறிச்சிட்ட குருவி ஊர் ஊராய்ப் போகுது அது என்ன?
**புளி.**

217. உயிர் இல்லாமல் ஓடித்திரிவான், மூக்கு இல்லாமல் மூச்சு விடுவான்
**புகைவண்டி (ரயில்).**

218. உச்சிக் கிளையிலே சாட்டை தொங்குது அது என்ன?
**முருங்கைக்காய்.**

219. உச்சியிலே கிரீடம் உடம்பெல்லாம் கண் அது என்ன?
**அன்னாசிப்பழம்.**

220. உடம்பெல்லாம் சிவப்பு அதன் குடுமி பச்சை அது என்ன?
**தக்காளி.**

221. உரையாத நீர் எது?
**வெந்நீர்.**

222. உச்சாணிக் கிளையிலே பிச்சாண்டி தொங்குகிறான் அவன் யார்?
**விளாம்பழம்.**

223. உமிபோல் பூ பூக்கும், சிமிழ் போல் காய் காய்க்கும் அது என்ன?
**நெல்லிக்காய்.**

224. உயரப் பறப்பவனுக்கு வால் உண்டு, கால் இல்லை அவன் யார்?
**பட்டம்.**



225. உள்ளே இருந்தால் ஓடித்திரியும், வெளியேவந்தால் விரைவில் மடியும்
**மீன்.**

226. உலகம் எல்லாம் திரிவான், அவனை ஒருத்தரும் கண்டது இல்லை
**காற்று.**

227. உயர்ந்த மாடிக்காரி, கறுப்புச் சேலைக்காரி, மஞ்சள் ரவிக்கைக்காரி
**பனம்பழம்.**

228. உடல் சிவப்பு, வாய் சிவப்பு, உணவோ காகிதம்
**தபால் பெட்டி.**

229. உச்சி வாதில் ஒசந்த வாதில், சாட்டைக் கொம்பு தொங்குது
**முருங்கைக்காய்.**

230. உச்சிக் கிளையிலே ஒரு முழக்குச்சி, ஊசியாய் ஆடுது
**முருங்கைக்காய்.**

231. உச்சாணி மரத்திலே, ஒலக்கை கட்டி தொங்குது
**முருங்கைக்காய்.**

232. உத்தியோகம் இல்லாமல் ஊர் சுற்றித் திரிகிறான்
**நாய்.**

233. உலர்ந்த காம்பில் விரிந்த பூ, அது என்ன?
**குடை.**

234. உள்ளே வெள்ளிப் பூட்டு, வெளியே நாரப் பூட்டு
**தேங்காய்.**

235. உள்ளூர் உத்தமிக்கு, உள்ளங்கையில் ஓட்டை
**உளுந்த வடை.**

236. உருளும், புரளும் தத்தளிக்கும் தாளம் போடும்
**நாக்கு.**

237. உருவம் இல்லாத மனிதன், உலகம் எல்லாம் சுற்றுகிறான்
**காற்று.**

238. உயர உயர சிறக்கும், உயர்ந்து விட்டால் எரிக்கும்
**சூரியன்.**

239. உயர்ந்த வீட்டில் இருக்கும், ஊரார் தாகம் தீர்க்கும்
**மழை நீர்.**

240. உயர்ந்த புரப்பான், விழுந்து விழுந்து கும்பிடுகிறான்
**ஏற்றம்.**

241. உப்பினை உண்டவன் உறங்காமல் அலைகிறான்
**கடல்.**

242. உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டி தொங்குது
**பலாக்காய்.**

243. உச்சியிலே பச்சைத் தோகை, உள்ளங்காலில் ரோமம்
**கரும்பு.**

244. உச்சாணி வாதிலே மச்சான் குழல் ஊதுகிறான்
**அணில்.**

245. உண்டுட்டு தின்னுட்டு, உயர் பற்றி ஏறுவான்
**அகப்பை.**

246. உடல் இல்லாதவன் ஊரெல்லாம் திரிவான்
**புகை.**

247. உருவத்தில் சிறியவன், உழைப்பிலே பெரியவன்
**தலைமுடி.**

248. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ எது?
**குடை.**

249. உடைந்த வெள்ளிக்கு, ஒக்குட ஆசாரி இல்லை
**அரிசி.**

250. உயிர் இல்லாத பறவை ஊர் ஊராய் பறக்குது
**கடிதம்.**



251. உமி போல் பூ பூக்கும், சிமிழ் போல் காய் காய்க்கும்
**கைத்தறி.**

252. உரசினால் போதும் அழிந்து விடும்
**தீக்குச்சி.**

253. உயரத்திலே ஒரு ரோஜா, உலகெங்கும் அதே ராஜா
**நிலா.**

254. உரசினால் போதும் ஒட்டிக் கொள்ளும்
**நாயுருவி.**

255. உருவம் உண்டு, உயிர் இல்லை,
**சட்டை.**

256. உரிக்க உரிக்க தோல்
**வெங்காயம்.**

257. உருவிலே பெரியவன், ஊருக்கு உயர்ந்தவன்
**கோபுரம்.**

258. உரித்த கோழி, ஊரெல்லாம் சுற்றி வருது
**பனைநார்.**

259. உயரப் பறக்கும், ஊன்று கோலில் நிற்கும்
**கொடி.**

260. உருவம் இல்லாத கல் ஐந்து – அது என்ன?
**கருக்கல். சறுக்கல். விக்கல். கொடுக்கல். வாங்கல்.**

261. உழைக்க உழைக்க உடம்பெல்லாம் தோன்றும்
**வியர்வை.**

262. உலகத்துக்கெல்லாம் ஒரே துப்பட்டி
**வானம்.**

263. உன்னுடன் ஒருவன், ஓடிக்கொண்டே இருக்கிறான்
**நிழல்.**

264. உன்னைப் பிடித்தவன் பெரியவன்

**நிழல்.**

265. உலகமெங்கும் படுக்கை விரித்து, உறங்காமல் அலைகிறான்

**கடல்.**

266. உருவம் இல்லாதவன் சொன்னதை திருப்பி சொல்வான்

**எதிரொலி.**

267. உயர்ந்த மனிதன், தோகை விரித்து ஆடுவான்

**தென்னை.**

268. உறைக்குள் இருக்கும், உயிரைப் பறிக்கும்

**கத்தி.**

269. உயிர் இல்லாத நீதிபதி, ஒழுங்காக நியாயம் சொல்கிறார்

**தராசு.**

270. உலகம் உறங்கினாலும் அவன் ஓடி விளையாடுவான்

**கடிகாரம்.**

271. உயிர் இல்லாத பறவை ஊர் ஊராய்ப் போய்ச் சேரும்

**ஆகாய விமானம்.**

272. உலகில் மெலிந்தவன் உடுப்பைக் காப்பவன்

**ஊசி.**

273. உள்ளே சீனிப்புட்டு, வெளியே நார்பூட்டு, அது என்ன?

**கரும்பு.**

274. ஊசி நுழையாத கிணற்றில் ஒரு படி தண்ணீர் அது என்ன?

**இளநீர்.**

275. ஊசி மூக்கன் உள்ளங்கை தட்டையன், ஊரெங்கும் செல்லப்பிள்ளை

**வெற்றிலை.**

276. ஊருக்கெல்லாம் ஒரே கல்

**உப்புக்கல்.**



277. ஊசி நுழையாத காட்டில், ஒரு துரை போகிறான்

**புகை.**

278. ஊளையிடும், ஊரை சுமக்கும்,

**புகை வண்டி.**

279. ஊரை சுற்றி வரும், தண்ணீர் குடிக்காது

**செருப்பு.**

280. ஊசி குத்திய வைத்தியர் ஊமை போலப் போகிறார்

**தேள்.**

281. ஊரெல்லாம் மூடி இருக்கும் ஊறுகாய் பானை திறந்திருக்கும்

**கிணறு.**

282. ஊருக்கு உழைக்கும் உத்தமன், உரக்க ஊதி எழுப்புவான்

**சங்கு ஒலி.**

283. ஊருக்கு பொதுவானவன், அடிக்கடி சலசலப்பான்

**வானொலி.**

284. ஊசிபோல மரம் காசு போல இலை – அது எது?

**ஆலக்கீரை.**

285. ஊசி முனையில் ஒய்யார சங்கீதம், அது என்ன?

**இசைத்தட்டு.**

286. ஊரெல்லாம் வம்பளப்பான், ஒரு அறையில் அடங்குவான்

**நாக்கு.**

287. ஊருக்கு நாட்டாண்மைக்காரன், சாப்பிட்ட இலையை எடுக்க மாட்டான், அவன் யார்?

**நாய்.**

288. ஊரிலிருந்து வாங்கி வந்த மாட்டை, உரிக்க உரிக்க வெறுந்தோல்

**வெங்காயம்.**

589. ஊசி நுழையாத கிண்ணத்தில், ஒரு ஆழாக்கு தண்ணீர்

**தேங்காய்.**

290. ஊளை மூக்கன் சந்தைக்குப் போறான்

**நுங்கு.**

291. ஊருக்கெல்லாம் ஒரே மூக்குத்தி, ஒளி வீசும் மூக்குத்தி அவள் யார்?

**சந்திரன்.**

292. ஊரைச் சுமந்தபடி உயரத்தில் பறப்பான் அவன் யார்?

**விமானம்.**

293. ஊதினால் பறக்கும், அதன் மதிப்பை உலகமே மதிக்கும்

**ரூபாய் நோட்டு.**

294. ஊருக்கு நடுவே உயர்ந்திருக்கும், உருவங்கள் பலவும் சுமந்திருக்கும் அது என்ன?

**கோபுரம்.**

295. ஊருக்கு உழைக்கும் உத்தமன், உறக்க ஊது குரல் எழுப்புவான்

**சங்கு.**

296. ஊர் முழுக்க ஒரே பந்தல் அது என்ன?

**வானம்.**

297. ஊரெல்லாம் ஒரு விளக்கு, அதற்கு ஒரு நாள் ஓய்வு அது என்ன?

**நிலா.**

298. எல்லா இடத்திலும் இருப்பேன், ஆனால் என்னைப் பிடிக்க முடியாது, நான் யார்?

**காற்று.**

299. எல்லா விஷயத்தையும் தெரிந்த எனக்குப் பேசத் தெரியாது, காலையில் வீடு தேடி வருவேன், நான் யார்?

**நாளிதழ்.**

300. எங்க அக்கா சிகப்பு, குளித்தால் கருப்பு அது என்ன?

**அடுப்புக்கரி.**

301. எட்டாத வெண்ணிலா எங்க வீட்டு அடுப்பிலே காயுது

**தோசை.**



302. எங்கப்பா ஊர் சுத்தி, எங்க அம்மா பிள்ளைதாச்சி அது என்ன?

**பூசணிக்காய்.**

303. என்னிடம் லப்டப், லப்டப் ஒலி கேட்கும் மணிகட்டில் இருப்பேன் நான் யார்?

**நாடி.**

304. எட்டு கால் ஊன்றி, இருகால் பட வட்டக்குடை பிடித்து வருவான்

**நண்டு.**

305. எட்ட இருப்பவனை எட்டும் வரை பார்க்க வைப்பான் அவன்யார்?

**கண் கண்ணாடி.**

306. எண்ணெயில் கோலம் போட்டு எடுத்த ஒரு பின்னல் தட்டு

**முறுக்கு.**

307. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே மஞ்சள் யானை நிற்கிறது,

**வைக்கோல் போர்.**

308. எத்தனை வேகமாக சுற்றினாலும் என்றும் தலைசுற்றாது அவனுக்கு அவன் யார்?

**மின்விசிறி.**

309. எட்டுவது போல் தெரியும், ஆனால் எட்டாது அது என்ன?

**வானம்.**

310. எல்லோருக்கும் கிடைக்காத மதி, எல்லோரும் விரும்பும் மதி

**நிம்மதி.**

311. எண்ணெய் வேண்டாத விளக்கு, எடுப்பார் கை விளக்கு

**மெழுகுதிரி.**

312. எங்கள் மாட்டுக்கு மூன்று கொம்பு, அது பின்னால் பாயும்

**ஊசுமுள்.**

313. என் குதிரை கருப்பு, குளிப்பாட்டினால் வெள்ளை அது என்ன?

**உளுந்து.**

314. எங்கம்மா சின்னம்மா, சேலை கட்டாத பொன்னம்மா

**படி.**

315. எரியும், ஆனால் குளிரும் அது என்ன?

**நிலா.**

316. எலும்பில்லாத மனிதன், கணுவில்லாத மரத்தில் ஏறுகிறான்

**பேன்.**

317. எதிர் புதிர் போட்ட ஏகாலிப் பயனுக்கு, முதுகிலே மூன்று சுழி

**அணில்.**

318. எடுத்துக் கிழித்தால் நெருப்பு, இல்லாவிட்டால் இருப்பு

**தீக்குச்சி.**

319. எங்கள் வீட்டு தோட்டத்திலே, மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது

**எலுமிச்சம் பழம்.**

320. எங்க வீட்டு எருமைக்கு, வருடம் ஒரு மேய்ச்சல்

**கூரை.**

321. எங்கள் வீட்டு கொல்லையிலே மொட்டையாண்டி எட்டி எட்டி பார்க்கிறான், அவன் யார்?

**நிலா.**

322. எட்டாத தூரத்திலே, தொட்டில் கட்டி ஆடுது

**குருவிக்கூடு.**

323. எரிப்பவன் – ஆனால் அவன் எரியாதவன்

**சூரியன்.**

324. என் தம்பி சின்னத் தம்பி, ஓடியாடி முள்ளடைக்கிறான்

**தையல் ஊசி.**

325. எங்கள் மாட்டுக்கு மூன்று கொம்பு, அது பின்னால் பாயும்

**ஊகமுள்.**

326. என்னைப்பார்த்தால் உன்னை காட்டுவேன்

**கண்ணாடி.**



327. எட்டாக் கொம்பிலே, மிட்டாய் பொட்டலம்

**தேன்கூடு.**

328. எழுந்திரு குண்டா, ஊருக்குப் போகலாம்

**கட்டுச் சோறு மூட்டை.**

329. எரிவான், மணப்பான், உற்சாகம் கொடுப்பான் அவன் யார்?

**ஊதுபத்தி.**

330. எட்டி நின்று பார்ப்பான், பெட்டியில் போட்டுக் கொள்வான்

**கேமரா.**

331. எத்தனை பேர் ஏறினாலும் சலிக்காத குதிரை

**திண்ணை.**

332. எங்கள் வீட்டில் ஒரு பெண்ணுக்கு வாய் நிறையப் பல் இருக்கிறது

**துருபலகை.**

333. எலும்பு இல்லாத மனிதன், எட்டு ஆறு நீந்துவான்

**அட்டை.**

334. எட்டு மொட்டெலும்பு, ஒரு கூடைச் சிறுகுடல்

**கயிற்றுக் கட்டில்.**

335. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது

**கடல்.**

336. என்னைச் சுற்றி தீ, நான் யார்?

**சூரியன்.**

337. என் தகப்பன் பச்சை, என் மகள் சிவப்பு, என் மகன் கறுப்பு

**தர்பூசிணி பழம்.**

338. எங்கள் வீட்டுக் கிணற்றிலே வெள்ளிக் கிண்ணடம் மிதக்குது

**நிலவு.**

339. எளிதில் உடையும் புட்டியில் இரண்டு ஸ்ட்ராங் தைலம் அது என்ன?

**முட்டை.**

340. எழுந்து விழுந்து தாவிடும், இரவும் பகலும் இரைந்திடும்

**கடல்.**

341. எண்ணும், முள்ளும் இல்லாத கடிகாரம் எவரும் பார்க்க முடியாத கடிகாரம் அது என்ன?

**இதயம்.**

342. எல்லோர் வீடும் மூடியிருக்க, கங்கை அம்மன் கோயில் திறந்து இருக்கிறது அது என்ன?

**கிணறு.**

343. எனது வடிவம் வட்டம், என்னை வைத்து குயவர் செய்வார் மண்பாண்டம், நான் யார்?

**சக்கரம்.**

344. எரிவான்,மணப்பான், உற்சாகம் கொடுப்பான் அவன் யார்?

**ஊதுபத்தி.**

345. ஏற முடியாத மரம் எட்டாயிரம் காய் காய்க்கும் அது என்ன?

**படகு.**

346. ஏழுமலைக்கு அந்தாண்டை, எருமைக்கடா கத்துது

**இடி.**

347. ஏறமுடியாத மரம், இலை விடும் மரம்

**வாழை.**

348. ஏரித்தண்ணீர் வற்ற வற்ற, எருமைக் கடா உப்ப உப்ப

**பணியாரம்.**

349. ஏறமுடியாத மரத்திலே, எண்ணாயிரம் காய்கள்

**கேழ்வரகு.**

350. ஏனை கோணல் மூணு, கண் ஆறு கால் பத்து

**கலப்பை**

351. ஏழை படுக்கும் பஞ்சணையை , எடுத்து சுருட்ட ஆள் இல்லை

**பூமி.**



352. ஏழும் ஏழும் பதினான்கு, சோலைத் தச்சர் செய்த வேலை

**பல்லாங்குழி.**

353. ஏறாத கொடியிலே ஏழாயிரம் மணிகள் அது என்ன?

**கேழ்வரகு. கதிர்.**

354. ஏழுமலைக்கும் அந்த பக்கம் எருமைக்கடா கத்துது, அது என்ன?

**இடியோசை.**

355. ஐந்து ஊருக்கு ஒரு மைதானம் அது என்ன?

**உள்ளங்கை.**

356. ஐந்து பேரில் இளையவன், கலியாணத்துக்கு மூத்தவன்

**சுண்டு விரல்.**

357. ஐயங் கோவணம், நெடுங்கோவணம் அது என்ன?

**நெடுஞ்சாலை.**

358. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு

**விரல்கள்.**

359. ஒற்றைத் தலையனுக்கு இரட்டைப் பல்

**முள்.**

360. ஒரு கிணற்றில் ஒரு தவளை

**நாக்கு.**

361. ஒரு துரைக்கு, இரண்டு தொப்பி

**வரத்த பட்டாணி.**

362. ஒரு முழ மூங்கிலில் ஒய்யாரக் கீதம் -- அது எது?

**புல்லாங்குழல்.**

363. ஒற்றைக் காலில் ஆடுவான் ஓய்ந்து போனால் படுப்பான்

**பம்பரம்.**

364. ஒரு சாண் குட்டையிலே ஒரு முழ வால்

**நாக்கு.**

365. ஒரு நெல் குத்தி, வீடெல்லாம் உமியாயிற்று

**தீபம்.**

366. ஒரே குருவிக்கு நான்கு இறக்கை ஒரே கால்

**அரைக்கீரை.**

367. ஒரு கால் நான்கு கீத்து, ஒரு பந்தல்

**ஆலக்கீரை**

368. ஒளி தந்த உத்தமன், உருக்குலைவான் அதனாலே

**மெழுகுவர்த்தி.**

369. ஒற்றைக் கால் குள்ளனுக்கு, எட்டுக் கை

**குடை.**

370. ஒருவன் ஓட்டி வர, இருவர் இழுத்து வர அது என்ன?

**செக்கு.**

371. ஒரு சாண் இரு பலகை, இரு நூறு தலை வாசல்

**தேன் குழல் பிடி.**

372. ஒற்றைக் கால் குருவி உலக்கு முட்டை இடும்

**சோளம்.**

373. ஒரு சாண் குச்சிக்குள்ளே ஒளிந்திருக்கான் கருப்பு மனிதன்

**பென்சில்.**

374. ஒலிகொடுத்து அலைப்பான், உரையாடலில் திளைப்பான்?

**தொலைபேசி.**

375. ஒரே மரத்திலே ஐந்து பூக்கள்

**பால். தயிர். வெண்ணெய். மோர். நெய்.**

376. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை

**அடுப்பு.**

377. ஒட்டுவது ஒருவன், பிரிப்பது ஒருவன், அவன் யார்?

**தபால்.**



378. ஒரு எழுத்து, எழுத உதவும், அது என்ன?

**கை.**

379. ஒரு வீச்சில் சார்க் – அது என்ன?

**தீக்குச்சி.**

380. ஒரு மூடி மூங்கிலில் ஒய்யார சங்கீதம் அது என்ன?

**புல்லாங்குழல்.**

381. ஒன்றைப் பிரிந்து மற்றொன்று வாழாது அது என்ன?

**செருப்பு.**

382. ஒற்றைக் கால் குருவி, உழக்கு முட்டை இடும்

**சோளம்.**

383. ஒரு கரண்டி மாவு, ஊரெல்லாம் தோசை

**நிலவு.**

384. ஒருவரை ஒருவர் துரத்தி துரத்தி காலம் காட்டினார்கள் அவர்கள் யார்?

**கடிகாரம். சின்னமுள், பெரியமுள்.**

385. ஒருவாய் தண்ணீரை சுமந்தபடியே உயரத்தில் நிற்கிறான்

**தென்னை மரம்.**

386. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை அது என்ன?

**மரம்.**

387. ஒற்றைக்கால் குள்ளனுக்கு, தலையிலே ஒய்யார குடை, அது என்ன?

**காளான்.**

388. ஒற்றைக்கால் நாராயணன், ஓடையிலே மீன் பிடிக்கிறான்

**கொக்கு.**

389. ஒரு தட்டில் ஆயிரம் ஓட்டைகள் அது என்ன?

**சல்லடை.**

390. ஒரு பக்கம் பல்லால் ஒன்றை ஒன்பதாக்கும் அது என்ன?

**ரம்பம்.**

391. ஒரு முழக் குழியிலே கால்படி மல்லிகைப் பூ அது என்ன?
**அடுப்புத் தீ.**

392. ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை அது என்ன?
**தோடு.**

393. ஒரு முழக் கயிற்றுக்கு ஓராயிரம் வாழ்த்துக்கள், அது என்ன?
**தாலி.**

394. ஒரு மரம் ஏறி, ஒரு மரம் பூசி, ஒரு மரம் வீசிப் போகிறாள்,
**பாதக்குறடு. சந்தனம். விசிறி.**

395. ஒரு நெல் எடுத்துக் குத்தினால் வீடு முழுவதும் பொறி
**விளக்கு.**

396. ஒரு நாடு ‘போ’ என்கிறது, ஒரு நாடு ‘வா’ என்கிறது அது என்ன?
**‘போலந்து. ‘வார்சா.**

397. ஒரு பக்கம் கறுப்பு, மறுபக்கம் சிவப்பு, உள்ளே வெள்ளை பருப்பு, அது என்ன?
**குண்டுமணி.**

398. ஒன்பது பிள்ளைக்கு ஒரே குடுமி அது என்ன?
**வெள்ளைப்பூண்டு.**

399. ஒற்றைக்கால் வெள்ளைச்சாமி, ஓடையில் நீர் பிடிக்கிறான்
**கொக்கு.**

400. ஒரு குட்டையை சுற்றி ஐந்து வீடு, அது என்ன?
**உள்ளங்கை விரல்.**

401. ஓங்கி வளர்ந்தவள், ஒரு பிள்ளை மட்டுமே பெற்றாள், அவள் யார்?
**வாழை.**

402. ஓங்கி வளர்ந்தவன் தாகம் தீர்ப்பதில் கெட்டிக்காரன்
**தென்னை மரம்.**

403. ஒற்றைக்கால் சுப்பனுக்கு தலைக்கணம் அதிகம் அவன் யார்?
**பம்பரம்.**



404. ஒலி கொடுத்தே உனை அழைக்கும், ஊர்க்கதையும் சொல்லும்
**டெலிபோன்.**

405. ஒத்தைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை
**மிளகாய்.**

406. ஒட்டியது இங்கே, வெட்டியது எங்கே அது என்ன?
**கடிதம்.**

407. ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் ஊரெல்லாம் வெளிச்சம் யாரவன்?
**நிலா.**

408. ஒரு ஜோடி சாக்ஸ் மாதிரி தோற்றம் கொண்டவன் நான், காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுவேன், நான் யார்?
**நுரையீரல்.**

409. ஒரே பிள்ளைக்கு ஆயிரம் பிள்ளைகள் அது என்ன?
**ஆலமரம்.**

410. ஒரு குட்டை அதைச் சுற்றி ஐந்து குழி அசையும், ஆனால் பிடுங்க முடியாது, அது என்ன?
**கை.**

411. ஒரு சாண் குதிரைக்கு உடம்பெல்லாம் பல் அது என்ன?
**சீப்பு.**

412. ஒரே குகையில் 50 திருடர்கள், வெளியே தலை காட்டினால் தலையைக் காணோம், அவர்கள் யார்?
**தீப்பெட்டி.**

413. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை அது என்ன?
**அடுப்பு.**

414. ஒற்றைக்கால் சுப்பனுக்கு தலைக்கணம் அதிகம், அவன் யார்?
**பம்பரம்.**

415. ஒரு காசுக்கு வடை வாங்கி உலகத்திற்கே கொடுத்தான்
**நிலா.**

416. ஒட்டிலே வீடு கட்டி, உள்ளே ஊறி கட்டி நட்டோருக்கெல்லாம் நல்ல பொருள் அது என்ன?

**தேங்காய்.**

417. ஒகோ உயர்ந்த மரம், உருவினால் தழை இல்லை அது என்ன?

**புகை.**

418. ஓரக்கழுத்தன் சந்தைக்குப் போனான் அது என்ன?

**சுரைக்காய்.**

419. ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை அது என்ன?

**குடை.**

420. ஒட்டை உடைத்ததும் தாகம் தீர்ப்பேன் நான் யார்?

**இளநீர்.**

421. ஓடியும் வருவான், உருண்டும் வருவான் அவன் யார்?

**சைக்கிள்.**

422. ஓசையிட்டபடி ஊரைச் சுமக்கும் அது என்ன?

**ரயில்.**

423. ஓரெழுத்து, பறக்கும் அது என்ன?

**ஈ.**

424. ஓராண்டு உழுதவனுக்கு ஒரு வார அறுவடை அது என்ன?

**தேர்வு.**

425. ஓடுது ஓடுது ஒரே தடத்தில் ஓடுது அது என்ன?

**ரயில் இஞ்சின்.**

426. ஒட்டுத் திண்ணையில் பட்டுக் காயுது அது என்ன?

**மூக்குத்தி.**

427. ஓசையிடுவான், உணவு சமைப்பான் அவன் யார்?

**குக்கர்.**

428. ஓட்டு வீட்டுக்காரருக்கு வேகமாக நடக்க வராது, அவர் யார்?

**ஆமை.**



429. ஓங்கி வளர்ந்தவன் ஒரு பக்கம் சாய்ந்தான்

**மூங்கில்.**

430. ஓர் எழுத்து உமிழும், அது என்ன?

**தூ.**

431. ஓடுகின்ற குதிரைக்கு விலாவெல்லாம் ஓட்டை

**புகைவண்டி (ரயில்).**

432. ஓட்டை வாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை

**சீப்பு.**

433. ஓ ஓ உயர்ந்த மரமே, உருவினால் பிடி கானாது

**புகை.**

434. ஓடுமாம் சாடுமாம் ஒற்றைக் காலில் நிற்குமாம்,

**கதவு.**

435. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு

**இரத்த ஓட்டம்.**

436. ஓட்டிலே வீடு கட்டி உள்ளே உரி கட்டி, நட்டாருக்கெல்லாம் நல்ல பொருள் எது?

**புளி.**

437. ஓடியாடி கத்தும், உடலைத் தேடிக் குத்தும்,

**கொசு.**

438. ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர்

**கண்ணீர்.**

439. ஓயாது, இரையும், எந்திரமுமல்ல, உருண்டோடி வரும் பந்துமல்ல

**கடல் அலை.**

440. கடலோரம் பச்சை மரம், கன்னி கழியா வன்னி மரம்

**தாழம்பூ.**

441. கண்ணால் பார்க்கலாம், கையால் பிடிக்க முடியாது

**நிழல்.**

442. கணக்கு பிள்ளை பொண்டாட்டி, கிணுக்குப் போட்டு ஆடினாள்

**ஆவாரங்காய்**

443. கழுத்தை அறுத்தால் கண் தெரியும்

**நுங்கு.**

444. கறுப்பர்கள் காலம் முடிந்தால் வெள்ளையர்கள் ஆதிக்கம்

**நரைமுடி.**

445. காட்டிலே கரும்புச் சோலையிலே, வீட்டிலே புதுப்பானையிலே

**வெல்லம்.**

446. கணுவில்லாத மரத்திலே எலும்பில்லாத மனிதம் ஏறுகிறான்

**பேன்.**

447. கண் இல்லாத நான் குருடருக்கு வழி காட்டுகிறேன்

**கைத்தடி.**

448. கணுக்கால் தண்ணீரில் கரடி நீச்சல் போடுது

**தவளை.**

449. கண் காண உருவம் உண்டு, கட்டிப் பிடிக்க உடல் இல்லை

**புகை.**

450. கவிழ்ந்து பூப் பத்து, நிமிர்ந்து காய் காய்க்கும்

**எள் செடி.**

451. கறுத்த சதுரக் கட்டை கறுத்துப் பூக்கும் குட்டை

**சிலேட்(கரும் பலகை).**

452. கண்டு காய் காய்க்கும் காணாமல் பூப் பூக்கும்

**வேர்க்கடலை**

453. கண்ணுக்கு தெரியாதவன், கண்ணை மறைப்பான்

**கண்இமை.**

454. காட்டிலே இருக்கும் குடை, வீட்டிலே இருக்காது

**காளான்.**



455. கறுத்த மேகம் கண்ணீர் விடும்போது, கறுத்த காளான் கம்பியிலே படர்ந்தது

**குடை.**

456. கண்ணுக்குள்ளே குச்சி குத்தி கதறுதாம் காளைக் கன்று

**தவில்.**

457. கல்லால் செய்த குதிரைக்கு, மரத்தாலே மூக்கணங்கயிறு

**மாவரைக்கும் திரிகை.**

458. கண்ணுக்கு தெரியாததை கணப்பொழுதில் காட்டிக் கொடுக்கும்

**பூதக்கண்ணாடி.**

459. கல்லைச் சுமந்தவன் கறிக்கு ருசி அவன் யார்?

**புடலங்காய்.**

460. கடித்தால் கடிபடாதவன், பிடித்தால் பிடிபடாதவன், அவன் யார்?

**தண்ணீர்.**

461. கரும் வயலில் யானைகள் மேய்ச்சல் அது என்ன?

**தலை பேன்.**

462. களம் கிட்ட காணி எட்ட

**உள்ளங்கை.**

463. கழுத்தை அறுத்தால் கண் தெரியும்

**நுங்கு.**

464. கல்லுக்கு அடியில் வில்லு

**தேள்.**

465. கண்ணுண்டு பார்வையில்லை, அவன் யார்?

**ஊசி.**

466. கனிக்கெல்லாம் கனி, திகட்டாத கனி

**பிள்ளைக்கனி.**

467. கறுத்திருக்கும் அரங்கத்தில், வெண்பந்து விளையாடுது

**கரும்பலகை, சாக்கட்டி.**

468. கழுத்தை வெட்டுவான் கையை வெட்டுவான், அவனை ஏனென்று கேட்பார் ஒருவரும் இல்லை,

**தையற்காரர்.**

469. கல்லிலே காய்க்கும் பூ, தண்ணீரில் மலரும் பூ

**சுண்ணாம்பு.**

470. கண் உண்டு செவி இல்லை, கண்டிடும் கேட்டிடும்

**பாம்பு.**

471. கடல் நீரில் வளர்வேன், மழை நீரில் மடிவேன்

**உப்பு.**

472. கட கடா குடு குடு, நடுவிலே பள்ளம்

**ஆட்டுக்கல்.**

473. கல்லுக்குக் கீழே கலச் சாம்பல், அது என்ன?

**கேழ்வரகு.**

474. கருத்த பாறைக்கு வெளுத்த வேர்

**யானைத் தந்தம்.**

475. கடக்கா முடக்கான் சந்தைக்குப் போறான், அவன் யார்?

**வண்டி.**

476. காய்க்கும் பூப் பூக்கும் இலை இல்லை, அது என்ன?

**சப்பாத்திக் கள்ளி.**

477. காம்பு இல்லாத காய் என்ன காய்?

**பொரிவிளங்காய்.**

478. காட்டில் கறுப்பன் கயிறு போடுகிறான், அவன் யார்?

**கட்டெறும்பு.**

479. காட்டில் கரிப்பானை கவிழ்ந்திருக்கிறது, அது என்ன?

**பனங்காய்.**

480. கட்டை போலிருந்தவனை வெட்டிப்பிழிந்தால் ருசியோ ருசி

**கரும்பு.**



481. கறுப்பாய் இருந்தவன் கரை சேர்ந்த போது அடடா இதென்ன பளபளப்பு, அவன் யார்?

**கரி - வைரம்.**

482. கடல் இருக்கும், தண்ணீர் இருக்காது, நாடு இருக்கும் வீடு இருக்காது, அது என்ன?

**உலக வரைப்படம்.**

483. கருப்பனிடம் இரண்டு கத்தி கனமான குத்துக்கத்தி துருப்பிடிக்காத வெள்ளைக்கத்தி, அது என்ன?

**யானைத் தந்தம்.**

484. கடித்தால் துவர்ப்பு, தண்ணீர் குடித்தால் இனிப்பு அது என்ன?

**நெல்லிக்காய்.**

485. கடுகு போல் வாயிருக்கும், கணக்கற்ற பல்வரிசை அடுக்கடுக்காய் எலும்பின்றி ஆயிரத்தப்பல் வரிசை அது என்ன?

**நத்தை.**

486. கறுப்புத் தோட்டத்தில் வெள்ளை நாத்து அது என்ன?

**கரும் பலகையில் சாக்பீஸ் எழுத்து.**

487. கருப்பு மாடு படுத்திருக்கு, வெள்ளைமாடு மேலே போகுது

**கரியும் - தீக்கொழுந்தும்.**

488. கட்டாமல், கறக்காமல் காடேறி மேயாமல் நின்ற இடத்தில் ஒரு படி பால், அது என்ன?

**இளநீர்.**

489. கண் சிமிட்டி, மணி அடித்து, கண்ணீர் வடிப்பார்கள்

**மின்னல். இடி. மழை.**

490. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?

**சாமரம்.**

491. கண்ணிற்கு கறுப்பழகி, நாவிற்கு இனிப்பழகி அது என்ன?

**நாவற்பழம்.**

492. கனுக்கால் நீரில் கரடி நீச்சல் போடுது அது என்ன?

**தவளை.**

493. கரிச்சட்டி வயிற்றிலே வெள்ளை முத்துக்கள் அது என்ன?

**சாதம்.**

494. கருப்பு, வைரம் பளபளவென்று மின்னுது அது என்ன?

**கீரை, விதை.**

495. கட்டுப்பட்டு இருந்த மகளை விட்டுப்பிரிந்து வந்தாள், அதுஎன்ன?

**உமி. நெல்.**

496. கலகல சத்தத்துடன் கைக்கு அழகானவன் அவன் யார்?

**வளையல்.**

497. கண்ணுக்குத் தெரியாததை கணப்பொழுதில் காட்டிக் கொடுக்கும் அது என்ன?

**மைக்ரோஸ்கோப்.**

498. கரையிலே போகிற கண்கவர் பாப்பாவுக்கு முதுகிலே மூன்று சுழி

**அணில்.**

499. கட்டில் நான்கு நடக்காது, கண் ஆயிரம் இமைக்காது, அது என்ன?

**கட்டில்.**

500. கனத்த பெட்டி கதவைத் திறந்தால் மூட முடியாது, அது என்ன?

**தேங்காய்.**

501. கருப்புச் சட்டைக்காரன், சட்டையை கழற்றினால் வெள்ளைக்காரன்

**உளுந்து.**

502. கண் உண்டு பார்க்காது, கால் உண்டு நடக்காது

**கட்டில்.**

503. காலையில் ஊதும் சங்கு, கறிசமைக்க உதவும் சங்கு அது என்ன?

**சேவல்.**

504. காதை திருகினால் கதை சொல்லுவான், அவன் யார்?

**வானொலி.**



505. காயும் காய்க்கும், பூவும் பூக்கும், கையை நீட்டினால் குத்தியும் கிழிக்கும், அது என்ன?

**கள்ளிச்செடி.**

506. காகிதம் கண்டால் கண்ணீர் விடும், முக்காடு போட்டால் முலையில் அமரும் அது என்ன?

**பேனா.**

507. காயில் ஒட்டியவன் பழத்தில் பிரிந்து விடுவான் அவன் யார்?

**புளியங்காய் பழம்.**

508. கடிவாளம் போட்டாலே காலிலே கிடக்கும் அது என்ன?

**செருப்பு.**

509. கருப்பவர்கள் காலம் முடிந்தால் வெள்ளையர் ஆதிக்கம்

**நரைமுடி.**

510. கல்லிலே மலரும் பூ, காசிக்கெல்லாம் போகும் பூ, தலையில் வைக்காத பூ, வாயில் வைக்கும் பூ, அது என்ன?

**சுண்ணாம்பு.**

511. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து தெருவிலே திரியும் பூ எது?

**உப்பு.**

512. கட்டிப் பிடித்திருந்த மகனை விட்டுப் பிரிந்து வந்தேன்

**உமி.**

513. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?

**சாமரம்.**

514. கடித்தால் கடிபடாதவன், பிடித்தால் பிடிபடாதவன், அவன்யார்?

**தண்ணீர்.**

515. கண்டு கண்டு பூ பூக்கும், பிஞ்சக் காணாமல் காய் காய்க்கும்

**வேர்க்கடலை.**

516. கருப்பு வைரம் பளபளவென்று மின்னுது அது என்ன?

**கீரைவிதை.**

517. காட்டிலே பெண் பிறந்து கன்னியர் கையாலே குத்தப்பட்டது
**பேன்.**

518. காடு கருங்காடு, கரும்புங் கருங்கரும்பு, குத்துவாருண்டு தின்பாரில்லை, அது என்ன?
**பேன்.**

519. காலையில் உறவு, மாலையில் அறவு அது என்ன?
**சூரியன்.**

520. காட்டில் கிடைத்த கட்டை, கான மழை பொழிகிறது அது என்ன?
**மூங்கில்.**

521. காற்றுக்குப் பருப்பவன், சிறு ஊசிக்கு முடிந்து போவான்,
**பலூன்.**

522. காலைக்கடிக்கும் செருப்பல்ல, காவல் காக்கும் நாய் அல்ல, அது என்ன?
**முள்.**

523. காரமாடு, கீரிக் கொம்பு, கரைக்கு போனால் துரத்திப் பாயுது
**தேனீ.**

524. காகிதம் கண்டால் கண்ணீர் விடும், முக்காடு போட்டால் மூலையில் அமருவான் அவன் யார்?
**பேனா.**

525. காட்டிலே தொங்கும் பொட்டலம், காவல் நிறைந்த பொட்டலம்
**தேன்கூடு.**

526. கால் இல்லாத மான், வேர் இல்லாத புல்லைத் தின்னும்
**மீன். பாசி.**

527. காட்டு மரம் என்றாலும் கானம் தரும் மரம் அது என்ன?
**மூங்கில்.**

528. கால், கை, இல்லை, காடும் மலையும் தாண்டுவான், அவன் யார்?
**மேகம்.**



529. காலில்லாத பந்தலைப் பார்க்க பார்க்க விநோதம் அது என்ன?
**ஆகாயம்.**

530. காட்டில் இருப்பான், வீட்டில் மணப்பான் அது என்ன?
**சந்தன மரம்.**

531. காட்டில் பச்சை, கடையில் கருப்பு, வீட்டில் சிவப்பு அது என்ன?
**மரம். கரி. தீ.**

532. காளைக் கட்டிக் கிடக்கிறது, கயிறு முட்டிக் கிடக்கிறது
**பரங்கிக்காய்.**

533. காதவழிப் போனாலும் கை கடுக்காத சுயச்சுமை அது என்ன?
**வயிற்றுப் பிள்ளை.**

534. காய் கச்சக பிச்சக, பூ மஞ்சக் பிஞ்சக், கொடி சன்னக பின்னக, அவை யாவை?
**பாகற்காய்.**

535. காட்டில் கிடைத்த கட்டை, கான மழை பொழிகிறது அது என்ன?
**நாவற்பழம்.**

536. காது இரண்டுடையான், கனத்த பாரம் தாங்குவான் அவன் யார்?
**பை.**

537. காய்க்கும் பூக்கும், சலசலக்கும், காக்காய் உட்கார இடமில்லை
**நெல்கதிர்.**

538. காக்கி சட்டைக்காரன், காவலுக்குக் கெட்டிக்காரன் அவன் யார்?
**போலீஸ்காரர்.**

539. கானம் இனிப்பு, அவனோ கருப்பு, அவன் யார்?
**குயில்.**

540. கானமயில் விரித்தாடுவாள் மாலையில் சுருங்குவாள், சூரியனின் காதலி என்பர், அவள் யார்?
**தாமரை.**

541. காலங்காட்ட இந்த தரிசன ஓட்டம்

**கடிகாரம்.**

542. காட்டு கருவப் பிள்ளை, வளைத்து ஒடிக்க முடியவில்லை

**தலைமுடி.**

543. காரிக்காளை பிடிக்கப் போனால், கொக்கர கொம்பன் இடிக்க வருகிறான், அவன் யார்?

**சுரிக்காய்.**

544. காலை மாலை நெட்டை, மற்ற நேரம் குட்டை

**நிழல்.**

545. காவலுக்கு வேலியாகும், காலியாகும், எதிரியாகும் அது என்ன?

**முள்.**

546. காடு கருங்காடு, நடுவில் வெள்ளை ரோடு, அது என்ன?

**தலைவகிடு.**

547. காட்டுக்கும் மேட்டுக்கும் ஒரே சங்கிலி

**எறும்பு.**

548. காடு சிறுகாடு, அங்கே கூட்டம் பெருங்கூட்டம் அது என்ன?

**தலைமுடி பேன்கள்.**

549. காற்றாடி பறப்பதேன், கல்வி வளர்வதேன் எதனால்?

**நூலினால்.**

550. காலை எழுப்பும் கடிகாரம் வாயே அதற்கு ஆதாரம் அது என்ன?

**சேவல்.**

551. காலால் உதைத்தால், காற்றால் உருளும்

**சைக்கிள்.**

552. காற்றை குடித்து, கைகளில் தவழும்

**பலூன்.**

553. காய் காய்க்கும், பழம் பழுக்காத மரம் எது?

**முருங்கை மரம்.**



554. காடு மேடெல்லாம் கிடைக்கும், கால் வைத்தால் குத்தும்

**முள்.**

555. கால் நான்கு நடக்காது, கண் ஆயிரம் இமைக்காது

**கட்டில்**

556. கால் இல்லாதவன், சற்று நேரத்தில் மறைகிறான்

**பாம்பு.**

557. கால் கறுப்பு முக்கால் சிவப்பு, உடைத்து பருப்பு தின்றால் துவர்ப்பு

**குன்றி மணி.**

558. கால் படாத நிலத்தில், கரு இல்லாத முட்டை

**காளான்.**

559. கால் இல்லாத மான், வேர் இல்லாத புல்லைத் தின்னும்

**மீன். பாசி.**

560. காற்றால் உயிர் பெறும், காதுக்கு இனிமை தரும்

**நாதசுரம்.**

561. காய் என்று கண்டது உண்டு, கனி என்று தின்றது இல்லை

**இலவங்காய்.**

562. காளைக் கட்டி கிடக்குது, கயிறு ஓடிக் கிடக்குது

**பரங்கிக் காய்.**

563. காலையில் வந்த விருந்தாளி, மாலையானதும் மறைந்து விட்டான்

**சூரியன்.**

564. காய் காய்க்காத மரம், பூப் பூக்காத மரம்

**கின்னுவமரம்.**

565. கால் இல்லாத பந்தலைக் காணக் காண விநோதம்

**வானம்.**

566. காக்கைப் போல் கருப்பு, வாயால் மென்றால் நீலம், அது என்ன?

**நாவல் பழம்.**

567. காய் காய்க்கும் பூவும் பூக்கும், காசுக்கொரு இலை இல்லை,

**புகை வண்டி.**

568. கிளிகள் மூன்று நிறம், கூட்டுக்குள்ளே போனதும் ஒரே நிறம்

**வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு.**

569. கிட்ட இருக்குது பட்டணம், எட்டிப்பபார்க்க முடியவில்லை

**முதுகு.**

570. கிழித்தக் கோட்டுக்குள் ஓடுகிறான், அவன் யார்?

**ரயில்.**

571. கிணற்றைச் சுற்றி புல்

**கண்ணைச் சுற்றி இருக்கும் ரோமம்.**

572. கிண்ணிப்போல பூப்பூக்கும், கிள்ளி முடிக்க உதவாது

**ஊமத்தம் பூ.**

573. கிச்சா பிச்சா ஊதா ரவிக்கை

**கேழ்வரகு.**

574. கிணற்றைச் சுற்றி வெள்ளைக்கல்

**பல்.**

575. கிளை உண்டு, இலை இல்லை அது என்ன?

**மான் கொம்பு.**

576. கிண்ணத்தில் ஒரு வெள்ளிக் கிண்ணம், அது என்ன?

**வானில் நிலா.**

577. கிர்ரென்று சுற்றுவான், புழுக்கத்தை விரட்டுவான். அவன் யார்?

**காத்தாடி.**

578. கிண்ணம் நிறைய தண்ணீர் இருக்கு, குருவி குடிக்க வழியில்லை

**இளநீர்.**

579. கீழே விழுந்தால் கருப்பு, வாயில் போட்டால் சிவப்பு அது என்ன?

**திராட்சை.**



580. கீரை விதைப்பது ஏன்? கீழோர் செல்வரைச் சுற்றுவது ஏன்?

**பிடுங்கித் தின்ன.**

581. கீழேயும், மேலேயும் மண், நடுவிலே அழகான பெண் அது யார்?

**மஞ்சள்.**

582. குட்டையான அழகிக்கு நெட்டையான ஜடை அது என்ன?

**கத்தரிக்காய்.**

583. குதிப்பான், பல்லை இளிப்பான், அவன்யார்?

**பொரி.**

584. குடை விரிக்கும், பயிர் உண்டு, விதை எங்கே தெரியாது

**காளான்.**

585. குண்டல் வாயில் குள்ளன் புகுந்தால் குபேர பட்டினத்திற்கு வழி தெரியும், அது என்ன?

**பூட்டு, சாவி.**

586. குரல் இல்லாதவன் கூப்பிடுகிறான், அவன் யார்?

**தொலைபேசி.**

587. குழந்தைக்கு எந்த கை பலமான கை?

**அழுகை.**

588. குட்டப் பிள்ளைக்கு, குறுணி நகை, அது என்ன?

**கோழி மயிர்.**

539. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை?

**அழுகை.**

590. குளம்படி ஓசைக்காரன், சவாரிக்கு கெட்டிக்காரன் அவன் யார்?

**குதிரை.**

591. குண்டு மனிதனுக்கு இரண்டு முண்டாசு, அவன் யார்?

**பட்டாணிக் கடலை.**

592. குண்டு முழி ராஜாவுக்கு, குடல் எல்லாம் பல்

**மாதுளம் பழம்.**

592. குள்ள அக்காள், குள்ள அக்காள், கூடைக் கந்தை கட்டியிருப்பாள், அவள் யார்?

<u>**வாத்து.**</u>

594. குளிச்சு, குளிச்சு குத்த வைக்கும், கோமாளிப் பயல் பிள்ளை

<u>**போகணி.**</u>

595. குட்டிப் போடும், ஆனால் எட்டிப் பறக்கும் அது என்ன?

<u>**வௌவால்.**</u>

596. குதிரை ஓட, ஓட வால் குறைகிறது, அது என்ன?

<u>**ஊசி. நூல்.**</u>

597. குருதியில், குளிப்பவன் நம் குருதியைக் காப்பவன், அவன் யார்?

<u>**இதயம்.**</u>

598. குத்துக் குருவிக்கு முழம் வால், அது என்ன?

<u>**அகப்பை.**</u>

599. குட்டிப் பசங்க வச்சிருக்காங்க சர்க்கரைத் தண்ணி வேண்டாதவங்க வந்தாக்கா பின்னிடுவாங்க அவங்க யார்?

<u>**தேன்கூடு - தேனீ.**</u>

600. குண்டன் குழியில் விழுந்தான். அவன் யார்?

<u>**குழிப் பணியாரம்.**</u>

601. குட்டை மரத்தில் கொட்டாப் புள்ளி, அது என்ன?

<u>**கத்திரிக்காய்.**</u>

602. குடுமியோடிருப்பான். கோயிலுக்கு போனால் தெறிப்பான். யாரவன்?

<u>**தேங்காய்.**</u>

603. குண்டு சட்டியில் குதிரை ஓடுது, அது என்ன?

<u>**மூத்து.**</u>

604. குட்டைத் தண்ணியில் எட்டுக் கப்பல், அது என்ன?

<u>**தவளை.**</u>



605. குளம்படிச் சத்தக்காரன் போருக்கு கெட்டிக்காரன் அவன் யார்?

<u>**குதிரை.**</u>

606. குனிந்த கிழவிக்கு கூனெல்லாம் பல்லு

<u>**கருக்கரிவாள்.**</u>

607. குடிக்கத் தண்ணீர் உண்டு, குளிக்கத் தண்ணீர் இல்லை

<u>**தேங்காய்.**</u>

608. குளிர் இல்லாமல் கூதல் இல்லாமல் குளிர் காய்பவர் யார்?

<u>**பொற்கொல்லர்.**</u>

609. குதி குதித்தாள், பல் இளித்தாள் யார் அவள்?

<u>**சோளப்பொறி.**</u>

610. குள்ளமான கோழிக்கு குடலுக்குள் சதங்கை

<u>**வேர்க்கடலை**</u>

611. குண்டுக் குள்ளனுக்கு, குடுமி நிமிர்ந்து நிற்கும்

<u>**தேங்காய்.**</u>

612. குட்டைப் பெண்ணுக்கு எட்டு முழச் சேலை

<u>**நீர் இறைக்கும் வாளி.**</u>

613. குட்டைப் பானையில் எட்டு முட்டி

<u>**கத்திரிக்காய்.**</u>

614. குட்டியும் போடும் குவலயத்திலும் பறக்கும்

<u>**வௌவால்.**</u>

615. குற்றம் செய்யாமலே குடுமி பிடிக்கிறான்

<u>**சவரத் தொழிலாளி.**</u>

616. குமுறி குமுறி அழுதிடும், நல்ல சோற்றைத் தந்திடும்

<u>**உலைநீர்.**</u>

617. குடுக்கை நிறைய வயிரமணி

<u>**மாதுளம் பழம்.**</u>

618. குண்டு பிள்ளையாருக்குத் திண்டிலே நாமம் அது என்ன?

**உளுந்து.**

619. குடிக்கலாம், அடிக்கலாம், அது எது?

**காப்பி.**

620. குனிந்து பூ பூக்கும், நிமிர்ந்து காய் காய்க்கும், அது என்ன?

**என் செடி.**

621. குதிகுதியெனக் குதிக்கிறான், கொட்டைப் பல்லால் சிரிக்கிறான்

**சோளப்பொறி.**

622. குளிருக்கு அஞ்சாதவன், வெயிலுக்கு பஞ்சானவன் அவன் யார்?

**பருத்தி.**

623. குளம்படி ஓசைக்காரன், சவாரிக்கு கெட்டிக்காரன் அவன் யார்?

**குதிரை.**

624. குடியிருக்க கோட்டை கட்டும் கோட்டையை உடைத்து வெளிவரும் அது என்ன?

**பட்டாம் பூச்சி.**

625. குட்டைத் தண்ணீரில் எட்டுக் கப்பல்கள் அது என்ன?

**தவளை.**

626. கூடும் வைத்திருப்பான், வீடும் வைத்திருப்பான், அவன் யார்?

**நத்தை.**

627. கூரையில்லா வீட்டுக்குள் குடிக்கும் பொருளுண்டு, அது என்ன?

**கிணறு.**

628. கூடவே வருவான் ஆனால் பேச மாட்டான் அவன் யார்?

**நிழல்.**

629. கூனற் கிழவனுக்கு, குதிகால்வரை பற்கள், அது என்ன?

**தேள்.**

670. கூரையில்லா வீட்டுக்குள் குடிக்கும் பொருளுண்டு, அது என்ன?

**கிணறு.**



671. கேடயமுள்ள வீரனுக்கு வாள் இல்லை அது என்ன?

**ஆமை.**

672. கையிலே அடங்குவார், கதை நூறு சொல்வார், அவர் யார்?

**புத்தகம்.**

673. கைக்குப் பூசினால் கல்யாண வீடு, உடம்புக்கு பூசினால் குளிர்ச்சி அது என்ன?

**சந்தனம்.**

674. கை, கால் இல்லை, காடும் மலையும் தாண்டுவான், அவன் யார்?

**மேகம்.**

675. கை பட்டதும் சிணுங்குவான், கதவு திறந்தால் அடங்குவான் அவன் யார்?

**காலிங்பெல்.**

676. கை போட்டுக் கறக்காத பால், இரண்டு பால் கொண்டு வா

**அப்பால். இப்பால்.**

677. கையுண்டு கால் இல்லை, கழுத்துண்டு தலை இல்லை

**சட்டை.**

678. கையில் கரணம் போடும் கணக்குப் பிள்ளை

**படி.**

679. கைக்குள் அடங்குவான், கண்ணைச் சிமிட்டுவான்

**டார்ச்சு விளக்கு.**

680. கையில் தவழும், பையில் உறங்கும்

**பணம்.**

681. கையில்லாமல் நீந்துவான், கால் இல்லாமல் ஓடுவான்

**படகு.**

682. கொண்டையில் அடி வாங்கி கோட்டையை பிளந்து கோயில் சிலை வடிக்கும், கோடிக்கலை படிக்கும், அது என்ன?

**உளி.**

683. கொடுக்க முடியும், எடுக்க முடியாது அது என்ன?

**கல்வி.**

684. கொட்டிக் கிடப்பவன் கோபுரமானவன் அவன் யார்?

**செங்கல்கள். கட்டிடம்.**

685. கொட்டையைத் தின்று விட்டு, நாட்டையை போட்டுவிடுவது

**சோளத்தட்டு.**

686. கொளுத்திய பின் கோடி கும்பிடு, அது என்ன?

**கற்பூரம்.**

687. கொக்கு நிற்க, நிற்க, குளம் வற்ற வற்ற அது என்ன?

**குத்துவிளக்கு.**

688. கொம்புக் காளை இறங்கி வருது, பிடிக்கப் போனால் கொம்பைக் காணோம், அது என்ன?

**ஊறும் நத்தை.**

689. கொம்பு நிறையக் கம்பு, தொட்டுப்புட்டா வம்பு, அது என்ன?

**தேள்.**

690. கொளிஞ்சிக் காட்டில் கொட்டாப் புளி

**முயல்.**

691. கொடி உடம்புக்காரிக்கு கூடையளவு பிள்ளை

**பூசணிக்காய்.**

692. கொம்பு நிறைய கம்பு, அது என்ன?

**மாதுளம்பழம்.**

693. கோடையில் ஆடி வரும், வாடையில் முடங்கி விடும்,

**மின் விசிறி.**

694. கையைப் பிடித்தார், காசு கேட்டார் யார்?

**டாக்டர்.**

695. கோயிலைச் சுற்றி கறுப்பு, கோயிலுக்குள்ளே வெளுப்பு

**சோற்றுப் பானை.**



696. கோயில் குளம் இல்லாமல், கொட்டி திரிகிறான் ஒருவன்

**குயவர்.**

697. கோணல் எத்தனை இருந்தாலும், குணமும் குறியும் மாறாது

**கரும்பு.**

698. கோடி, கோடியா வெள்ளிப்பணம் கொட்டி கிடக்குது வீதியிலே

**ஆகாய நட்சத்திரம்.**

699. சட சட மாங்காய் சங்கிலி ரோடு, விழுந்தால் கருப்பு தின்றால் தித்திப்பு

**நாவல்பழம்.**

700. சங்கீத பாட்டுக்காரன் சுமை தூக்க அஞ்சமாட்டான் அவன் யார்?

**கழுதை.**

701. சட்டையைக் கழற்றியதும், சடக்கென்று உள்ளே விழும்

**வாழைப்பழம்.**

702. சடக்கென்று வருவான் சத்தமிட்டுப் போவான்

**தும்மல்.**

703. சலசலவென்று சத்தம் போடும், பேச மட்டும் வராது

**காய்ந்த இலைகள்.**

704. சமையலுக்கு வேண்டியவன், ஆனால் கண்ணை கசக்க வைப்பான், அவன் யார்?

**வெங்காயம்.**

705. சண்டை சச்சரவு இல்லாமல், குடுமி பிடிப்பவன் யார்?

**நாவிதர் (சவரத்தொழிலாளி).**

706. சட்டையிலே 'பை' வைத்தவன் தாவுவதில் கெட்டிக்காரன் அவன் யார்?

**கங்காரு.**

707. சட்டை யை கற்றியவன் புதுசட்டைதான் போடுவான். அவன் யார்?

**பாம்பு.**

708. சங்கீத பாட்டுக்காரன், மழையில் கச்சேரியே செய்வான், யாரவன்?

**தவளை.**

709. சங்கரன் கோயில் டப்பா, தாயும் மகளும் தேய்ப்பா

**அம்மி, குழவி.**

710. சாவடிக்குள்ளே சப்பட்டைக் கல் அது என்ன?

**நாக்கு.**

711. சாண் குழியிலே மாணப் பழம்

**நெருப்பு.**

712. சாடிமேலே குரங்கு, அது என்ன?

**முந்திரிக் கொட்டை.**

713. சாமி கும்பிடப் போகும் போது எந்த காலை முன் வைத்து நடக்க வேண்டும்?

**தீபக்கால்.**

714. சாலையில் கிடக்கிறானே என்று இவனை உதைக்க முடியாத, அவன் யார்?

**முள்.**

715. சிலுசிலுத்த தண்ணீரில் செம்மறியாடு மேயுது,

**எண்ணெய், பலகாரம்.**

716. சித்திரப் பின்னல் கோட்டைக்குள்ளே, போக வழி உண்டு வர வழி இல்லை, அது என்ன?

**எலிப்பொறி.**

717. சிவப்பு நிற காளை, நீரென்றால் பதுங்கும் காளை அது என்ன?

**நெருப்பு.**

718. சின்ன வெங்காரம், வீடெல்லாம் சிங்காரம்

**தீபம்.**

719. சினந்து சிவந்தவன், சிதைந்து போவான்

**தீ.**



720. சின்னச் சாத்தான் வயிறு பெருத்துச் செத்தான்

**பருத்திக் கொட்டை.**

721. சின்ன மச்சான், குனிய வச்சான்

**முள்.**

722. சின்னக் குதிரைக்கு நூறு கடிவாளம்

**தறி.**

723. சின்னஞ் சிறு வீட்டிலே சிப்பாய்கள் பல பேர்

**தீப்பெட்டி, தீக்குச்சி.**

724. சிவப்பு சட்டிக்கு கருப்பு மூடி

**குன்றி மணி.**

725. சின்னஞ் சிறு பாத்திரம், பாப்பாவுக்கு ஏற்ற பாத்திரம்

**கெண்டி.**

726. சில்லாடைதண்ணிரிலே வெள்ளாடு மேயுது

**உள்ளான் குருவி.**

727. சின்னச் சிட்டான், இழுத்து இழுத்து முள்ளடைப்பான்

**ஊசி.**

728. சிவப்பு நிறக் காளை, நீருக்குள் பதுங்கும்

**தீ.**

729. சிவப்பு மொச்சைக் கொட்டை, பகட்டும் பட்டுச் சட்டை

**பட்டுப்பூச்சி.**

730. சிவப்புப் பைக்குள், சில்லறை கொட்டிக் கிடக்குது

**மிளகாய்.**

731. சிவப்பு சட்டைக்காரன், சேவுகத்தில் கெட்டிக்காரன்

**உலர்ந்த மிளகாய்.**

732. சின்ன வீடு நிறைய சீத்தாபழம், அது என்ன?

**வானொலி.**

733. சின்ன கதவுகள் எத்தனை தடவைகள் திறந்து மூடினாலும் ஓசை, தராத கதவுகள் அது என்ன?

**கண்ணிமை.**

734. சின்னக் குழியில் செம்மறி ஆடு மேயுது

**குழிப்பணியாரம்.**

735. சின்னத் துரைக்குச் செல்லத் தொப்பி இரண்டு

**பட்டாணிக் கடலை.**

736. சின்ன சின்ன குதிரைக்கு நூறு கடிவாளம் அது என்ன?

**கண்மணி.**

737. சின்னப் பொடியனுக்கு, அரண்மனையில் வேலை, அது என்ன?

**படி.**

738. சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும் அது என்ன?

**தபால்.**

739. சிறகு மடக்காமல் சின்ன விழி மூடாமல் பறக்கும் பூச்சி அது எது?

**தட்டாம் பூச்சி.**

740. சிங்காரமாய் ஒளிரும். காற்றில் சீறிப்பாயும் தொட்டால் சுடும். அது என்ன?

**தீபம்.**

741. சின்ன சின்ன பெட்டிக்குள்ளே சேதியெல்லாம் கண்ணுக்குள்ளே

**டெலிவிஷன்.**

742. சின்ன மீசைக்காரன், மியாவ் ஓசைக்காரன், அவன் யார்?

**பூனை.**

743. சிட்டுக்குருவிக்கு எட்டு முழச்சோலை, அது என்ன?

**வாழைப்பழம்.**

744. சின்னஞ்சிறு குருவி இழுத்து, இழுத்து வேலி அடைக்குது

**ஊசி நூல்.**



745. சிறகடித்துப் பறப்பவனை சமாதானத்துக்கு உதாரணம் என்பர், அவன் யார்?

**புறா.**

746. சின்னத்தம்பிக்கு தொப்பியே வினை அது என்ன?

**தீக்குச்சி.**

747. சிறையில் வைத்த சின்னப் பையனைச் சீண்டிப் பார்த்தால் சீறுகிறான், அவன் யார்?

**தீக்குச்சி.**

748. சுட்ட கருவாடு, நட்டமே நிக்குது அது என்ன?

**அடுக்குப் பானை.**

749. சுமக்கத் தெரிந்த மனமே, உனக்கு துவைக்கத் தெரியாதே

**கழுதை.**

750. சுருட்டையானவன் காற்றுக்கு வளைவான் அவன் யார்?

**தலைமுடி.**

751. சுட்டக் குருவி ஊர் மேலே போகுது

**பலகாரம்.**

752. சுட்ட பிணத்தைச் சுட, செத்த பிணம் வந்திருக்கிறது

**கரிதுருத்தி.**

753. சுட்டுவிட்டுக் குருவி கப்பலேறுகிறது

**வடை.**

754. சுட்டவன் சந்தைக்குப் போறான்

**சட்டி.**

755. கருவாடு, நட்டமே நிக்குது

**அடுக்குப் பானை.**

756. சுமையும் சுமந்திருக்கும், அடியும் சுமந்திருக்கும்

**உறி.**

757. சுறுக்கென்று முள், பொறுக்க முடியாது – அது என்ன?

**தேள்.**

758. சுற்றிச் சுழல்வான், வீர விளையாட்டுக்கு இவனை சொல்வர்

**சிலம்பாட்டம்.**

759. சுள்ளென்று இருப்பான், சோற்றுக்கு சுவை கூட்டுவான், யாரவன்?

**ஊறுகாய்.**

760. சுற்றி, விட்டால் சுழன்று சுழன்றிடுவான், அவன் யார்?

**பம்பரம்.**

762. சூடு பட்டுச் சிவந்தவன், வீடு கட்ட உதவுவான்

**செங்கல்.**

764. சூரியன் வந்தால் விரைந்தழைப்பார், வெள்ளையன் வந்தால் விரைந்தோடுவார், அது என்ன?

**விளக்கு.**

765. செம்பட்டு உடழலகி தலைகீழாய் குடை பிடிக்கிறாள் அவள் யார்?

**மிளகாய் பழம்.**

766. செடியில் மணக்கும், சட்டையில் மயக்கும் அது என்ன?

**பூ, அக்தர்.**

767செத்தக் காய்ந்த மாடு, சந்தைக்குப் போகிறது

**கருவாடு.**

768. செக்கச் சிவந்த நிறம், தேங்காய் திருவி அரம்

**சேவல் கொண்டை.**

769. செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன்

**சீனிக்கிழங்கு.**

770. செவலை எருது பிடிக்கப் போனால், கொக்கி எருது குத்த வருது

**இலந்தை.**

771. செடியை உலுக்குது ஒரு குருவி, செடியோரம்போகுது ஒரு குருவி

**வெள்ளாடு. செம்மறியாடு. எருமை. பசு.**



772. செல்லாப் பணம் செல்வதும், செங்கருடன் பறப்பதும் எதனால்?

**வட்டமிட்டு.**

773. செய்ததைச் செய்யும் குரங்கு அல்ல, சிங்காரிக்க உதவும் சீப்பு அல்ல

**கண்ணாடி.**

774. செத்தபின் பூமியில் இறங்குகிற பட்சி அது என்ன?

**அடுப்பு.**

775. செம்மண்ணுக்குள்ளே சிவந்த மனிதன், அவன் யார்?

**மண்புழு.**

776. செக்க செப்பிய நாங்க, கட்டிக் கொடுத்தாப் போவோம் கல்லு தடுக்கினா சாவோம் அது என்ன?

**மண்பானை.**

777. சேட்டு வீட்டுப் பாப்பா ! எட்டி எட்டி பார்க்கிறா, அது என்ன?

**மூக்குசளி.**

778. சேர்த்து வைத்துக்கொள் என்றால் கேட்காது, அவ்வப்போது வேண்டுமென்று அடம் பிடிக்கும், அது என்ன?

**வயிறு.**

779. சொறியனைக் கறி சமைக்கச் சோறெல்லாம் கசப்பு

**பாகற்காய்.**

780. டெலிபோன் நான், பிசியானவன், தகவல்களை உள்வாங்கி வெளியேற்றுவேன், நான் யார்?

**மூளை.**

781. தண்ணீர் இல்லாமல் வளரும், தரையில்லாமல் படரும்

**உரோமம்.**

782. தண்ணீர் இல்லாத தடாகத்தில் தாவிப்பாயுது ஒரு கப்பல், எது?

**ஒட்டகம்.**

783. தன்னை அழைத்தவளை, தானே அழித்திடுவாள்

**விஷம் (நஞ்சு).**

784. தண்ணீரோடு போகும் கல் எது?
**விக்கல்.**

785. தண்ணீர் இல்லாத தடாகத்தில், தாவிப் பாயுது ஒரு கப்பல்
**ஒட்டகம்.**

786. தலையை சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
**பென்சில்.**

787. தலையில்லை இடையில்லை, கையுண்டு விரலில்லை
**வயல்.**

788. தலைக்கு கவசம் உயிருக்கு பாதுகாப்பு அது என்ன?
**ஹெல்மெட்.**

789. தட்டத் தட்ட தகடு, காயக் காய விறகு
**எரு மூட்டை.**

790. தலைமேல் முளைத்திருக்கும், இலையில்லா மரம்
**மான் கொம்பு.**

791. தச்சர் கொத்தர் செய்யாத தேர், தானே கிளம்பும் சித்திரத் தேர்
**புற்று.**

792. தரையில் முட்டிடும், விரலில் ஒட்டிடும்
**கால் மெட்டி.**

793. தங்கை தீட்டிய ஓவியம், தரையில் தவழுது
**கோலம்.**

794. தங்கை தலையிலே பாம்பு
**பின்னல்.**

795. தம்பிக்கு எட்டுவது, அண்ணனுக்கு எட்டாது
**உதடு.**

796. தங்க மாம்பழத்தை, திங்க முடியவில்லை
**நெருப்பு.**



797. தடத்திலே போகிறவன் தடிக்கம்பை வீசினான்
**சுருட்டு.**

798. தண்டு இல்லாத வட்ட வட்ட இலை
**அப்பளம்.**

799. தச்சர் செய்யாத தேரு, தானாக வரும் பாரு
**புற்றி.**

800. தண்ணீரிலே வெள்ளை – அது என்ன?
**மீன்.**

801. தண்ணீரிலே துள்ளாட்டம், தரையிலே தள்ளாட்டம் அது என்ன?
**மீன்.**

802. தண்ணீரில்லா பொட்டலிலே தாவிச் செல்லும் கப்பல் எது?
**ஒட்டகம்.**

803. தரக்கான் புரக்கான் சந்தைக்குப் போகிறான்
**செருப்பு.**

804. தண்ணீருக்குள்ளிருந்து வந்தவனை தண்ணீரிலேயே கரைத்தார்கள் அவன் யார்?
**உப்பு.**

805. தரையிலும் இருப்பான், தண்ணீரிலும் இருப்பான், அவன் யார்?
**தவளை.**

806. தண்ணீரில் விளையும் கல், தண்ணீரில் கரையும் கல், அதுஎன்ன?
**உப்புக்கல்.**

807. தன்னை அழுக்காக்கி தான் இருக்கும் இடத்தை அழகு படுத்துகிறான், அவன் யார்?
**துடைப்பம்.**

808. தலையில் மோதி மோதி, பல்லை உடைத்தான் அவன் யார்?
**சீப்பு.**

809. தண்டு மேலே தாழி, தாழிக்குள்ளே தண்ணீர், தண்ணிக்குள்ளே கொடி, கொடிக்கு மேலே ஒளி, அது என்ன?

குத்து விளக்கு.

810. தலையில்அடித்தால் வாய்விட்டு அழுவான், அவன் யார்?

கை பம்பு.

811. தலையை வெட்ட வெட்ட கருப்பு நாக்கை நீட்டுவது அது என்ன?

பென்சில்.

812. தலையில் ஏறும் மாடு, சுருண்டு பிடிக்கும் மாடு, அது என்ன மாடு?

சும்மாடு.

813. தலைக்கு குடை, காலில் முள் அது என்ன?

குண்டூசி.

814. தட்டனால் பறப்பான், தடவினால் சாவான் அது என்ன?

கொசு.

815. தலையைச் சீவினால், தாகம் தீர்ப்பான் அவன் யார்?

இளநீர். நொங்கு.

816. தரையில் இருப்பான், தண்ணீரில் மிதப்பான், அவன் யார்?

படகு.

817. தலையில் வைக்காத பூ, ஆடு விரும்பி உண்ணும் பூ,அதுஎன்ன பூ

வாழைப்பூ.

818. தாடி மீசைக்காரன், கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன், அவன் யார்?

தேங்காய்.

819. தாழ்ப்பாள் இல்லாத கதவு, தானாக மூடி திறக்கும் கதவு

இமை.

820. தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே அவை என்ன?

வைக்கோல். நெல்.



821. தாய் தெருவிலே மகள் கொலுவிலே

வைக்கோல். நெல்.

822. தாளைக் கொடுத்தால் தின்னும், தண்ணீர் குடித்தால் மடியும்

நெருப்பு.

823. தாளம் இல்லாத ஆட்டம், தாய் மார் விரும்பாத ஆட்டம்

சூதாட்டம்.

824. தாயின் வாயில் பிறக்கும், தரணி எங்கும் சிறக்கும், அது என்ன?

தாலாட்டு.

825. தாய் தரையில் கிடக்கிறாள், மகள் மகராசா முடியில் இருக்கிறாள்

முத்துசிப்பி. முத்து.

826. தாயை அடுப்பில் வைத்து, பிள்ளையைப் பொறித்து தின்றாள்

துவரங்குச்சி, துவரம் பருப்பு.

827. தாய் சப்பாணி, மகள் குந்தாணி, யாரவர்கள்?

ஆட்டுக்கல். குழவி.

828. தாழ்ப்பாள் இல்லாத கதவு, தானாக மூடித்திறக்கும் கதவு, அதுஎன்ன?

இமை.

829. திக்குத் தெரியாத காட்டிலே சொக்கன் பந்து அடிக்கிறான்

எலி.

830. திரி இல்லாத விளக்கு – எது?

சூரியன்.

831. திருப்பதி போனாலும் திரும்பாத பல்லக்கு

பிணம்.

832. தினமும் மெலிவான், அவன் யார்?

நாமக்கட்டி.

833. திறந்தால் சீறிக் கொண்டு வருவான், ஆனால் தாகமும் தீர்ப்பான்

சோடா கலர்.

834. திடீரென்று வந்து தீவெட்டி வெளிச்சம் அப்புறம் தொடர்ந்தது, கடாபுடா சத்தம் அது என்ன?

**மின்னல். இடி.**

835. தீனிக்குக் குறைவில்லை, ஆனால் தீர்த்தம் உண்டால் மரணம்

**தீ.**

836. துள்ளித் துள்ளி போனாலும் துவளாமல், போவான் அவன் யார்?

**தவளை.**

837. துச்சனிச் சித்தன் கட்டையைப் பிளந்தான்

**முள் இடுக்கி.**

838. துக்குணிச் சிறுசுக்கு முக்கலத் தந்தை, அது என்ன?

**கோழி.**

839. தூங்கும் போது வருவான், தூக்கமெல்லாம் கலைப்பான்

**கனவு.**

840. தேனைச் சுமப்பவன் தேளாகவும் கொட்டுவான் அது யார்?

**தேனீ.**

841. தேடாமல் கிடைக்கும் பல், தேடும் செல்வத்தைக் குறைக்கும் பல்

**சோம்பல்.**

842. தேவை என்றால் வீசுவார்கள், தேவையில்லை என்றால் எடுத்து வைப்பார்கள்

**நங்கூரம்.**

843. தேடிக்கிடைத்த இரையை கூடிக்கூடி உண்பான் அவன் யார்?

**காகம்.**

844. தேர் அசைய பூ உதிர, அது என்ன?

**திரிகை.**

845. தொட்டால் மயங்குவான், கொஞ்ச நேரம் தயங்குவான், அவன் யார்?

**தொட்டாசிணுங்கி.**



846. தொப்பையனுக்கு ஒரு வாசல், தோழனுக்கு இரண்டு வாசல்

**சட்டை.**

847. தொட்டால் சுருங்கிக்கு தொண்ணூறு கால் அது என்ன?

**மரவட்டை.**

848. தொடையிலே தொடை அது என்ன?

**ஆடாதொடை.**

849. தோலை உரித்தால் அழ மாட்டான், உரித்தவனை அழ வைப்பான்

**வெங்காயம்.**

850. நன்றாக சுமை தாங்கும், நன்றாக உதை வாங்கும்

**கழுதை.**

851. நடுக்காட்டில் ஒரு கூழ்ப்பானை, திறந்து கிடக்குது

**கிணறு.**

852. நடுவிலே இருக்கும் ராசாவுக்கு, நாலா பக்கமும் காவல்

**கரும்பலகை**

853. நடக்க மாட்டாதவன் வீட்டுக்கு, உட்காரமாட்டாதவன் போகிறான்

**மரமும். வௌவாலும்.**

854. நடுக்காட்டுக்குள் நாலுராஜா குடை, பிடித்துக் கொண்டுநிற்கிறார்

**மாட்டுக் காம்பு.**

855. நட்டேரி நடுவில், நடுத்தம்பி குழல் ஊதுகிறான்

**தவளை.**

856. நடுக்காட்டுக்குள்ளே, ஒரு சொட்டு ரத்தம்

**குன்றி முத்து.**

857. நட்டமாய் நிற்கிறவனுக்கு, நறுக் நறுக்கென்று கடிக்கிற வேலை

**அரிவாள் மனை.**

858. நல்லது சொல்வான் நாக்கு இல்லாதவன், அவன் யார்?

**புத்தகம்.**

859. நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறான்

**புகை.**

860. நன்றிக்கு வால், வாலில் அடிபட்டால் வள்வள் அது என்ன?

**நாய்.**

861. நட்டாற்றில் முட்டை மிதக்குது, அது என்ன?

**பரிசல்.**

862. நடுக்காட்டில் வெள்ளை வேட்டி, வரிந்து கிடக்குது அது என்ன?

**குளம்.**

863. நடக்க முடியாது, நகராமல் இருக்காது அது என்ன?

**கடிகாரம்.**

864. நடக்க வக்கில்லாத நொண்டி, நாலு பேருக்கு வழிகாட்டி

**கைகாட்டி.**

865. நல்ல பொண்ணு உத்தமிக்கு நடுக்குடலில் ஓட்டை அது என்ன?

**வடை.**

866. நல்லதை அனுப்பிவிட்டு கெட்டதை வைத்துக் கொள்வான் யார்?

**சல்லடை.**

867. நல்லவர் கொள்ளும் தானம் நாலு பேருக்கு தராத தானம்

**நிதானம்.**

868. நம்மோடு பிறந்து வளர்ந்து நம்மோடு மடிவான் அது என்ன?

**வயது.**

869. நனைந்தாலும் நடுங்க மாட்டான், அவன் யார்?

**குடை.**

870. நடைக்கு அஞ்சாது, ஆனால் தண்ணீருக்கு அஞ்சும்

**செருப்பு.**

871. நாற்கால் காரி நடவாள் படுப்பாள்

**கட்டில்.**



872. நான் உடைந்தால் முறிவு என்பார்கள் நான் யார்?

**எலும்பு.**

873. நாட்டார் மகளை ஓட்டால் மூடி இருக்கும் அது என்ன?

**புளியம்பழம்.**

874. நாலு மூலைப்பெட்டி அதில் ஓடும் குதிரைப்பெட்டி அது என்ன?

**அம்மி குழவி.**

875. நான் வாங்கிய பிள்ளைக்கு, ஒற்றைக் கண்

**ஊசி.**

876. நாலா வழியிலும் போகும், நம்பிக்கை துரோகமும் செய்யும்

**பூனை.**

877. நான் இழுக்க, நீ இழுக்க, நாட்டு சப்பரம் கட்டி இழுக்க, நாய் போடும் சத்தம் என்ன? அது என்ன?

**தயிர் கடைதல்.**

878. நாளுக்கு நாள் இளைப்பவனுக்கு நாள் காட்டும் வேலை, யாரவன்

**தினசரி காலண்டர்.**

879. நாலு கால் வீரன் நன்றிக்கு உதாரணம் அவன் யார்?

**நாய்.**

880. நாலு காலுண்டு, வீச வாலில்லை அது என்ன?

**நாற்காலி.**

881. நிலத்திலே முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி

**முடி.**

882. நித்திரையின் தூதுவன், நினையாமல் வருவான்

**கொட்டாவி.**

883. நித்திரையில் கொண்டவள் நிலம் சுற்றி அலைகிறாள் யாரவள்?

**கடல்.**

884. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை அது என்ன?

**இடை.**

885. நீரிலே கொண்டாட்டம், நிலத்திலே திண்டாட்டம்

**மீன்.**

886. நீலநிறத் தோட்டத்திலே, மஞ்சள் பூ பூத்திருக்கு

**பௌர்ணமி நிலவு.**

887. நீந்தத் தெரியாத சின்னப் பையன், நீருக்குள்ளே குதிக்கிறான்

**கிணற்று வாளி.**

888. நீல நிறத்தில் நித்தில் முளைகள் அது என்ன?

**நட்சத்திரங்கள்.**

889. நுனி சிவப்பு, அடி பச்சை, நடு வெள்ளை அது நமது அன்னை

**இந்திய தேசியக் கொடி.**

890. நூல் இல்லை ஊசி உண்டு, வாய் இல்லை பாடும்,

**கிராமபோன்.**

891. நூறு கிளிக்கு ஒரே வாய், அது என்ன?

**வாழைப்பூ.**

892. நெருப்பிலே பிறந்து, நீரிலே மூழ்கி, வாயிலே தவழ்ந்த வானத்திலே போகிறவர்

**குடாக்குப் புகை.**

893. நெற்றியிலே கோல் பட்டு, கதறுகிறதாம் காளை

**மத்தளம்.**

894. நெடுக வளர்ந்தவனுக்கு நிழல் இல்லை அது என்ன?

**தார்ரோடு.**

895. நெட்டை அக்காள் தாக்குகிறாள், குட்டை அக்காள் தாங்குகிறாள்

**உரல், உலக்கை.**

896. நெட்டையானவன் பள்ளத்திலிருந்து குதித்தெழுந்து நீரோடு மேலே வருவான், அவன் யார்?

**ஏற்றம்.**



897. நெருப்பு பட்டால் அழுவான், அவன் யார்?

**மெழுகுவர்த்தி.**

898. நேற்று பிறந்தவன் இன்று கட்டுகிறான், அது என்ன?

**ஊசி.**

899. நோயில்லாமல் இளைப்பான், உணவில்லாமல் பருப்பான் – யார்?

**கரும்பு.**

900. பல்லைப் பிடித்து அழுத்தினால், பதறிப் பதறி அழுவான்

**ஆர்மோனிய வாத்தியம்.**

901. நோயுமில்லை, நொடியுமில்லை, நாளெல்லாம் மெலிகிறார், யாரவர்?

**காலண்டர்.**

902. பச்சைக் குடத்திற்குள் இனிப்பான பானம் அது என்ன,

**இளநீர்.**

903. பச்சைக்கு ஓட்டம், சிவப்புக்கு நிறுத்தம் அது என்ன?

**போக்குவரத்து சிக்னல்.**

904. பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு

**வானம்.**

905. பகலில் தூங்குவான், இரவில் அலறுவான்

**ஆந்தை.**

906. பரட்டைத்தலை மாமியாருக்கு பவளம் போல் மருமகள்

**இலந்தைப் பழம்.**

907. படுத்து உறங்காத மிருகம், பந்தயத்தில் ஓட்டம் அதிகம்

**குதிரை.**

908. பச்சை நிறப் பார்ப்பான், வயிறு வெடிக்க வெருத்தான்

**பருத்திக்காய்.**

909. நோயுமில்லை, நொடியுமில்லை, வாய் ஓயாமல் முக்கி, முணங்கித்திரிகின்றான் ஒரு பெருத்த வயிறான், அவன் யார்?

**பன்றி.**

910. பல நாள் காய்த்து, ஒரு நாளில் பழுக்கும்

**சட்டி.**

911. பட்ட மரத்தை தட்டினால் படைகள் வரும்

**தமுக்கு.**

912. பறவையல்ல, பறக்கிறது

**வான ஊர்தி.**

913. பட்டையிலே பட்டை என்ன பட்டை?

**வாழைப் பட்டை.**

914. பட்டுப்பை நிறையப் பவுன் காசு

**மிளகாய் விதை.**

915. பழுத்தபின் காயாகும், அது என்ன காய்?

**ஊறுகாய்.**

916. பறிக்க பறிக்க பெரிதாகிறது, அது என்ன?

**குழி.**

917. பரந்த காட்டேரிக்கு பக்கமெல்லாம் ஜடை அது என்ன?

**ஆலமரம்.**

918. பஞ்சு இல்லாமல் நூல் விற்கும் பலே தொழிலாளி யார்?

**சிலந்தி.**

919. பழமாகாப் பழம் என்ன பழம்?

**விபூதிப் பழம்.**

920. பத்து மாட்டுக்கு ஒரு தட்டு

**மத்துக் கோல்.**

921. படியிலே படி என் படி?

**வாசற்படி.**

922. பட்ட மரத்திலே பம்பரம் ஆடுது

**கமலை இறைக்கும் உருளை.**



923. பட்ட மரத்திலே சிவப்பு அதிலும் பச்சை

**கிளி.**

924. பச்சைப் புல்லில் துவண்டு வரும், பவளம் போல் உருண்டு வரும் அது என்ன?

**பனித்துளி.**

925. பல் இருப்பவள் கடிக்கலே, பல் இல்லாதவன் கடிக்கிறான் அவன் யார்?

**சீப்பு. செருப்பு.**

926. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் அவன் யார்?

**சீப்பு.**

927. பள்ளம் பார்த்தால் பாய்ந்து செல்வான், அவன் யார்?

**தண்ணீர்.**

928. பறந்தபடி பாடுவான், உட்கார்ந்தால் ரத்தம் குடிப்பான் அவன்யார்?

**கொசு.**

929. பச்சையாய் விரிச்சிருக்கு, பருவம் கழிந்தால் மணிகள் குவியும்

**நெல்வயல்.**

930. பச்சை கிளி பறக்க முடியாத கிளி, கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி, அதுஎன்ன?

**மாங்காய்.**

931. பள்ளிக்குச் செல்வான், பாடம் படிக்க மாட்டான் அவன் யார்?

**பள்ளிப் பேருந்து.**

932. பன்னிரண்டு பிள்ளைகள் உள்ள பெரிய குடும்பத்தில் இந்த பிள்ளை மட்டும் சவலப்பிள்ளை அவன் யார்?

**பிப்ரவரி மாதம்.**

933. பகலில் சுருண்டு கிடப்பான், இரவில் விரிந்து கிடப்பான்

**பாய்.**

934. பகலில் தூங்கி இரவில் விழிப்பான் அவன் யார்?
**விண்மீன்கள்.**

935. பல பேர்க்கு ஒரு குடுமி, அது என்ன?
**வெள்ளைப்பூண்டு.**

936. பகலில் தங்கத்தட்டு, இரவில் வெள்ளித்தட்டு அது என்ன?
**சூரியன், சந்திரன்.**

937. பக்கத்தில் இருப்பான், படுத்தால் மறைவான்அவன் யார்?
**நிழல்.**

938. பல்லைப் பிடித்து அழுத்தினால் பதறிப் பதறி அழுவாள்
**ஆர்மோனியப் பெட்டி.**

939. பகலில் இருபுறமும், இரவில் நடுவிலும் இருக்கும் அது என்ன?
**கதவு.**

940. பச்சைச் செடியில் தயிர் சாதம் அது என்ன?
**மல்லிகைப்பு செடி.**

941. பகலில் துயில்வான், இரவில் அலறுவான் அது யார்?
**ஆந்தை.**

942. பற்கள் பல உண்டு, ஆனால் எதையும் தின்ன மாட்டான்
**பல் சக்கரம்.**

943. பறக்காத பூப்பந்து, பகட்டான சிறுபந்து, வாயிலே போட்டால் தேன்பந்து, அது என்ன?
**லட்டு.**

944. பச்சை, வெள்ளை, கருப்பு பக்குவமானால் சிவப்பு, அது என்ன?
**வெற்றிலை. சுண்ணாம்பு. பாக்கு.**

945. பறக்கும் ஆனால் பறந்து போகாது, அது என்ன?
**கொடி.**

946. பச்சைப் பெட்டியில் பத்துச்சரம் வெள்ளை முத்துக்கள் அதுஎன்ன?
**வெண்டைக்காய்.**



947. பட்ட மரத்தைத் தட்டினால் படைகள் வரும், அது என்ன?
**முரசு.**

950. பஞ்சை அதிகமாகச் சாப்பிட்டு படுத்தே கிடக்குது, அது என்ன?
**தலையணை.**

951. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல், அது என்ன?
**கிளி.**

952. பறக்க தெரிந்தவனின் உயரம் கூரை வரை மட்டும் தான், யாரவன்
**சேவல்.**

953. பயந்தால் விடமாட்டான், பழகினால் மறக்க மாட்டான் யாரவன்?
**நாய்.**

954. பஞ்சு இல்லாமல் நூல் விற்கும் பலே தொழிலாளி யார்?
**சிலந்தி.**

955. பச்சைக் குடத்திற்குள் இனிப்பான பானம் அது என்ன?
**இளநீர்.**

956. பட்டுன்னு போட்டா பளிச்சின்னு எரியும் அது என்ன?
**மின்சார விளக்கு.**

957. பாத்திரம் ஒன்று, பழரசம் இரண்டு அது என்ன?
**முட்டை.**

958. பார்த்தால் கல்தான், பல் பட்டால் தண்ணீர்தான், அது என்ன?
**பனிக்கட்டி.**

959. பாரனில் காய்த்தும் பழுக்காத மரம் அது என்ன?
**இலவமரம்.**

960. பார்க்கும்போது கருப்பு, பாடும்போது இனிப்பு! அது என்ன?
**குயில்.**

961. பார்க்க கல்லானவன், கடிக்க இனிமையானவன், அவன் யார்?
**கல்கண்டு.**

962. பாங்காய் இருப்பாள், பட்டென்று போவாள்
**மண்பாண்டம்.**

963. பாடி அழைப்பான்உறவை, கூடி உண்பான் உணவை, அவன் யார்?
**காகம்.**

964. பாத்திரம் ஒன்று, பழரசம் இரண்டு, அது என்ன?
**முட்டை.**

965. பாதுகாப்பான பெட்டிக்குள் பலரும் விரும்பும் கடிகாரம்
**இதயம்.**

966. பால் இல்லாமல் இருக்கிறது, நோய் இல்லாமல் இளைக்கிறது,
**நிலா.**

967. பாறை மேல் இட்ட விதை, பார்ப்பவர் வியக்க முளைத்த விதை
**பல்.**

968. பார்ப்பதற்கு ஐந்து கால், எண்ணுவதற்கு நான் கால்
**யானை.**

969. பாலாற்றில் கருப்பு மீன் மேயுது
**கண், கருவிழி.**

970. பாத்தியிலே பாத்தி என்ன பாத்தி?
**பாப்பாத்தி.**

971. பாக்கை எண்ண முடியவில்லை, பாயை சுருட்ட முடியவில்லை
**விண்மீன், வானம்.**

972. பார்க்க அழகானவன், பாம்புக்கு எதிரானவன் அவன் யார்?
**மயில்.**

973. பார்க்க முடியும் நூல், தைக்க முடியா நூல், அது என்ன நூல்?
**சிலந்தி வலை.**

974. பார்த்தவர் இரண்டு பேர், எடுத்தவர் ஐந்து பேர், சாப்பிட்டவரோ ஒரே ஒருவர், அவர்கள் யார்?
**கண்கள். கை விரல்கள். வாய்.**



975. பிடியில்லாத குடையை தொட முடியவில்லை அது என்ன?
**வானம்.**

976. பிறக்கும் போது சுருண்டிருக்கும், பிறந்த பின் பிரிந்து இருக்கும்,
**வாழைஇலை.**

977. பிடி இல்லாத குடையை, தொட முடியவில்லை
**வானம்.**

978. பிடிக்க முடியாத கள்ளன், அவன் யார்?
**புகை.**

979. பிள்ளை பிறந்தவுடன் எழுந்து, நான்கு பேரைக் கடித்தது
**கன்றுக்குட்டி (பால் குடிப்பது).**

980. பிடிக்க முடியாத கள்ளன் அவன் யார்?
**புகை.**

981. பிறக்கும்போதும் இறக்கும் போதும் இல்லாதது இடையில் வந்து போகுது அது என்ன?
**பல்.**

982. பிறந்ததும் இனிப்பாள், கலந்ததும் புளிப்பாள், கடைந்த பின் மணப்பாள் – இவள் யார்?
**பால். தயிர். வெண்ணெய் (நெய்).**

983. பிறப்போடு வந்தது, இறப்போடு போய் விடும், அது என்ன?
**மூச்சு.**

984. பீமனுக்கு சோறு போட்டு வீதியில் கிடப்பான் அது என்ன?
**இலை.**

985. புள்ளிகளை சுமந்தபடி புல்வெளியில் நடமாட்டம் அவன் யார்?
**மான்.**

986. புதைத்து வைத்த பொருள், பொத்துகிட்டு வருது
**விதை முளைப்பது.**

987. புள்ளிகள் இருந்தும் கோலம் போட முடியவில்லை அது என்ன?

**நட்சத்திரம்.**

988. புறக்கடை அண்டாவுக்கு பொத்தலே வராது அது என்ன?

**கிணறு.**

989. புதரின் நடுவே பொன் போலப் பூத்திருக்கும் பொய் சொன்ன பூ என்று புராணக் கதை கூறும் அது என்ன?

**தாழம்பூ.**

990. பூத்தபோது மஞ்சள், காய்த்த போது சிவப்பு பழுத்தபோது கருப்பு

**பேரீச்சம் பழம்.**

991. பூவை பூவெடுத்து, பூமீது வைத்தீன்னா பூ போக, மீதிப் பூ இருக்கும், அது என்ன?

**எறும்பு. கரும்பு. வரப்பு.**

992. பூ கொட்ட கொட்ட பொறுக்க முடியவில்லை அது என்ன?

**மழைத்துளி.**

993. பூவிலே வெள்ளைப் பூ, பூமியை நோக்கும் பூ

**எள்ளுப் பூ.**

994. பூட்டுச் சாவி இல்லாத பெட்டி, காசு கொடுத்து வாங்கும் பெட்டி

**தீப்பெட்டி.**

995. பூவில் பிறக்கும், நாவில் சுவைக்கும்

**தேன்.**

996. பூமியிலே பிறக்கும், புகையாய் போகும்

**பெட்றோல்.**

997. பூவா காப்பூ என்ன பூ?

**குங்குமப்பூ.**

998. பூப்பூவா இருக்கும், ஆனால் தலையில் வைக்க முடியாத பூ என்ன பூ

**காலிஃபிளவர்.**



999. பூமியிலே வளராத மரம், கிளை உண்டு, இலை இல்லை

**மான் கொம்பு.**

1000. பையில் அது இருந்தால், வேறு எதுவும் அங்கிருக்காது

**கிழிசல்.**

1001. பையுடன் பிறந்தவள் பிள்ளையை அதில்சுமக்கிறாள், அவள் யார்?

**கங்காரு.**

1002. பூக்காத பூ என்ன பூ?

**குங்குமப் பூ.**

1003. பூ இருந்தும் பறிப்பதில்லை

**சேவல்.**

1004. பூ இருக்கப் பிஞ்சைத் தின்றேன், அது என்ன?

**வெள்ளரிப் பிஞ்சு.**

1005. பூப்போல் மகராசி காயத்துக்கும் துணையானாள், அது என்ன?

**பஞ்சு.**

1006. பூமியிலே பிறக்கும் புகையாய்ப் போகும் அது என்ன?

**பெட்றோல்.**

1007. பூ இருந்தும் பறப்பதில்லை, அது என்ன?

**சேவல் கொண்டை.**

1008. பூரண சந்திரன் வடிவம், புட்டு திண்ண உதவும், அது எது?

**தோசை.**

1009. பூ காயாகும், காய் கனியாகும், கனி காயாகும், அந்த காய்என்ன?

**பூசணிக்காய்.**

1010. பூமியிலே பெண் பிறந்தேன், பிடித்தவர்க்கு கட்டுப்பட்டேன்

**துடைப்பம்.**

1011. பெட்டியை திறந்தால் பவளங்கள், அது என்ன?

**மாதுளம்பழம்.**

1012. பெயரில் புலி உண்டு உருவிலோ, செயலிலோ அது இல்லை

**அம்புலி.**

1013. பெட்டியை திறந்தால் பெருங்காயம் மணக்கும்

**பலாப்பழம்.**

1014. பெருங்கயாம் தலையில் சிங்காரம்

**பம்பரம்.**

1015. பெரிய மீசைக்காரன், மியாவ், மியாவ் அண்ணன்காரன் யாரவன்?

**புலி.**

1016. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது, அது என்ன?

**தேங்காய்.**

1017. பெட்டியை திறந்தால் கிருஷ்ணன் பிறந்தான் அது என்ன?

**வேர்க்கடலை.**

1018. பெத்த பிள்ளை கொடுக்காததை வளர்த்த பிள்ளை கொடுப்பான்

**தென்னம் பிள்ளை.**

1019. பேர் பெற்றது காலாலே, பொதிசுமப்பது உடலாலே அது என்ன?

**நாற்காலி.**

1020. பொழுது போனால் பூந்தோட்டம் விடிந்தால் வெறுந்தோட்டம்

**வானம்.**

1021. பொரித்ததும் நடக்கும் அது என்ன?

**கோழிக்குஞ்சு.**

1022. பொருள் ஒன்று கூட்டினால் பதினொன்று வர வேண்டும்,

**ஆரஞ்சு பழம்.**

1023. பொடிப் பையனுக்கு பொருட்டுருமால்

**தீக்குச்சி.**

1024. போட்டால் பொரியும் இங்கிலீஷ் முட்டை

**கடுகு.**



1025. போகும் போது கிழவி, வரும் போது குமரி

**தோல் பறி (தண்ணீர் பறி).**

1026. போட்டால் ஒரு மடங்கு, போட்டு எடுத்தால் இரு மடங்கு

**அப்பளம்.**

1027. போருக்கு போகாத வீரன், போர்களத்தையே விரட்டி விடுவான்

**பாம்பு.**

1028. போகப் போக வெள்ளிப் பணத்தை வீசி எறிஞ்சிட்டுப் போகிறான்

**எச்சில்.**

1029. போகும் இடமெல்லாம் கோடு கிழித்த விடுவான்

**நத்தை.**

1030. போகையில் திரும்பி வராது, அது என்ன?

**உயிர்.**

1031. போவான் வருவான் கறுத்தப்பன், தலைகீழாய் நிற்பான் கறுத்தப்பன், அது என்ன?

**வௌவால்.**

1032. போகுமிடமெல்லாம் தம்பி கோடு கிழிப்பான், அவன் யார்?

**நத்தை.**

1033. மரக்கிளையை தலையில் தூக்கி மருண்டபடி ஓட்டம் அவன் யார்?

**மான்.**

1034. மது இல்லாமல் தள்ளாடுவான், தண்ணீரில் அது எது?

**நாக்கு.**

1035. மணி அடித்தால் மலை பாம்பு நிற்கும் அது என்ன?

**ரயில்.**

1036. மஞ்சள் பொட்டிக்குள் சிவப்பு முத்துக்கள், அது என்ன?

**மாதுளம் பழம்.**

1037. மரக்கிளையை சுமந்தவடி மனம் போல பயணம் அது என்ன?

**மான்.**

1038. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்குது பூ

**விண்மீன்.**

1039. மண்ணுக்குள் பிறக்கும், மங்கைக்கு அழகு தரும்

**மஞ்சள்.**

1040. மலைகள் பிறந்த நாட்டிலே, இலைகள் கவிழ்ந்த மரம்

**தென்னை மரம்.**

1041. மண்ணிலே பிறந்து, விண்ணிலே மறையுது

**சாம்பிராணி.**

1042. மரம் ஏறும் மங்காத்தாளுக்கு, முதுகிலே மூன்று சூடு

**அணில்.**

1043. மண்டையிலே போட்டால், மகிழ்ந்து சிரிப்பான்

**தேங்காய்.**

1044. மதில் இல்லாத கோட்டை, மக்கள் இல்லாத நாடு

**மனம்.**

1045. மண்ணுக்குள்ளே வெள்ளிக்கட்டி அது என்ன?

**முள்ளங்கி.**

1046. மட்டை உண்டு கட்டை இல்லை, பூவுண்டு மணமில்லை

**வாழை.**

1047. மணம் இல்லாத மல்லிகை, மாலையில் மலரும்

**தீபம்.**

1048. மக்குப் பிள்ளையாருக்கு, மாரியம்மா வார்த்திருக்கிறது

**பலாப்பழம்.**

1049. மண்ணுக்குள்ளே மயிர் கோதி அது என்ன?

**பனங்கிழங்கு.**

1050. மண்ணுக்குள்ளே மயிர் பயிராகிறது

**வெட்டிவேர்.**



1051. மண்ணுக்குள்ளே மட்காத கயிறு

**மண்ணுள்ளிப் பாம்பு.**

1052. மண்ணுக்குள்ளே இருப்பான், குழம்பிலும் மணப்பான்

**மஞ்சள்.**

1053. மடியலை பறித்தால் பிடியிலை இல்லை

**புகையிலை.**

1054. மளிகை கடையில் இருக்கும் ராணி என்ன ராணி?

**சாம்பிராணி.**

1055. மழைக்கு குடைபிடிக்காதவன் கடிக்க உணவுமானவன், யாரவன்?

**காளான்.**

1056. மண்ணுக்குள் கிடப்பவன் மங்களகரமானவன் அவன்யார்?

**மஞ்சள்.**

1057. மந்திரமெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே, மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே அது என்ன?

**பருத்திக் கொட்டை.**

1058. மரமோ ஒன்று, கிளைகளோ பன்னிரண்டு, இலைகளோ முப்பது

**வருடம். மாதம். நாட்கள்.**

1059. மழையின் முன்னும் பின்னும் மாயாஜாலம் காட்டும் அது என்ன?

**வானவில்.**

1060. மரம் வழுக்கும், காய் துவர்க்கும், பழம் இனிக்கும், அது என்ன?

**வாழை.**

1061. மண்ணுக்குள் இருப்பான், மங்களத்துக்குச் சொந்தக்காரன்

**மஞ்சள்.**

1062. மரத்துக்கு மேலே பழம், பழத்துக்கு மேலே மரம் அது என்ன?

**அன்னாசிப்பழம்.**

1063. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்குது பூ, அது என்ன?

**இரவு வானம்.**

1064. மழைக்கும் அசையாது எருமையல்ல, வெயிலுக்கும் வாடாது மாடுமல்ல, அது என்ன?

வீட்டின் கூரை.

1065. மண்ணுக்குள்ளே இருந்தவன், கூட்டுக்குள்ளே இருப்பான்

வேர்க்கடலை.

1066. மண்ணுக்குள்ளே மட்காத கயிறு, அது என்ன?

மண்புழு.

1067. மஞ்சள் பெட்டி மரக்கால் பெட்டி, ஒரு காலும் திறக்காத பெட்டி,

வயிறு.

1068. மார்மட்டுக் கோரையிலே மயிலைக் காளை மேயுது

பேன்.

1069. மாமரத்திலே அடித்த மாங்காய், மாத்தூரில் போய் விழுகிறது

மரத்தின் அடியில் கிடக்கிறது.

1070. மாரி இல்லாமல் ஆமை கெட்டது, ஆமை இல்லாமல் சீமை கெட்டது

வேளாண்மை, வேளாண்மை.

1071. மார் தட்டும் கோரையிலே, மயிலைக் காளை மேயுது

பேன்.

1072. மாவில் பழுத்த பழம் மக்கள் விரும்பும் பழம்

அப்பளம்.

1073. மாயக்கண்ணன் சொல்லுவதை சொல்லி விடுவான், அவன் யார்?

விண்மீன்கள்.

1074. மின்சாரம் இல்லாத டியூப் லைட் பளிச்சென எரியுது

நிலா.

1075. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை அது என்ன?

நாக்கு.

1076. முதுகு மேல் இருப்பது கூடு, முத்தம்மாளுக்கு அது வீடு

நத்தை.



1077. முன்னும் பின்னும் போவான், ஒற்றைக் காலிலே நிற்பான்

கதவு.

1078. முதல் முதல் கற்ற பொருள், முடிவிலும் அறியாப் பொருள்

மகாவிஷ்ணு.

1079. முற்றத்தில் நடக்கும், மூலையில் படுக்கும்

துடைப்பம்.

1080. முத்துக்கு உவமை, சொல்லுக்கு உவமை

பல்.

1081. முள்ளுக் கோட்டைக்குள், மோகினி உறங்குகிறாள்

பலாக்கனி.

1082. முடுக்கு வீட்டுக்குள், முன்னூறு தென்னம்பிள்ளை

மூக்கினுள் முடி.

1083முதுகெல்லாம் கூனல், வயிறெல்லாம் பல்

கருக்கரிவாள்.

1084. முட்டிக் குதிரைக்கு முன்னூறு கால்

ஊமத்தங்காய்.

1085. முல்லைத் தோட்டத்தில் கருப்பு முத்து அது என்ன?

கண்.

1086. முப்பத்திரண்டு சிப்பாய்கள் நடுவே மகராசா அவர்கள் யார்?

பற்கள். நாக்கு.

1087. முத்தும் முத்தும் குதித்து விளையாட எங்கள் ராஜா மகிழ்ந்து விளையாட அது என்ன?

மாம்பழம்.

1088. முச்சந்தியில் மூன்று விளக்கு, பார்த்து நடந்தால் பாதுகாப்பு

சிக்னல்.

1089. முயல் புகாத காடு எது?

முக்காடு.

1090. முல்லைத் தோட்டத்தில் கருப்பு முத்து அது என்ன?

**கண்.**

1091. மூக்கிலே பூவைத்தவன், முனங்காமல் போக மாட்டான்,

**சேவல்.**

1092. மூடா தொட்டியில் எடுக்க எடுக்க நீர் இருக்கும் அது என்ன?

**கடல்.**

1093. மூடிக்கிடப்பவனைக் கூட திறக்க வைப்பான் அவன் யார்?

**கொட்டாவி.**

1094. மூன்று போலீஸ்காரனுக்கு ஒரே தொப்பி

**பனம்பழம்.**

1095. மூன்று கோடுள்ளவன் அழகு வாலுள்ளவன் பழத்துக்கு மட்டும் எதிரி அவன் யார்?

**அணில்.**

1096. மூக்கனுக்கு மூன்று முழ நீளம், மூக்கன் பொண்டாட்டிக்கு முறத்து அகலம்

**வாழை மரம். வாழை இலை.**

1097. மூடித்திறந்ததும் மூக்கைத் துளைக்குது அது என்ன?

**பலாப்பழம்.**

1098. மூக்கைத் தட்டி வாயில் போட்டேன் அது என்ன?

**வேர்க்கடலை.**

1099. மூடாத தொட்டியில் எடுக்க எடுக்க நீர் இருக்கும் அது என்ன?

**கடல்.**

1100. மூங்கிலே பூவைத்தவன், முணங்காமல் போகமாட்டான்

**சேவல்.**

1101. மூன்று கண்களிருந்தும் இவனால் பார்க்க முடியாது, யார் அவன்?

**தேங்காய்.**



1102. மூன்று கால் யானை, தின்பதெல்லாம்கரும்பு

**அடுப்பு.**

1103. மூன்று கொம்பு மாடு, ஒரு கொம்பால் முட்டுது

**நெருஞ்சி முள்.**

1104. மூன்று காசுக் குதிரைக்கு, பின்னால் கடிவாளம்

**ஊசி.**

1105. மூன்று காசில் ஒரு வீடு நிறையும், அது என்ன?

**விளக்கு.**

1106. மூன்று திருடர்களைச் சுற்றி ஒரு டஜன் போலீஸ், அவர்கள் யார்?

**கடிகாரம். முட்கள்.**

1107. மூனு பொண்ணு ஒரு முகம், மூத்த பொண்ணு அத்திலே,

**முதலை. உடும்பு. பல்லி.**

1108. மூடும் திறக்கும் முத்திருக்கும் பெட்டி, பாடும் படிக்கும் பாம்பிருக்கும் சட்டி அது என்ன?

**வாய்.**

1109. மேலே பூப் பூக்கும், கீழே காய் காய்க்கும்

**வேர்க்கடலை.**

1110. மேல் பலகை கீழ் பலகை, நடுவில் நெளி பாம்பி

**வாய், நாக்கு.**

1111. மேகத்தின் பிள்ளை அது, தாகத்தின் நண்பன் அது

**மழை.**

1112. மொட்டை மரத்தில் முன்னூறு காக்காய்

**பரிசில்.**

1113. மொட்டைப் பாறையில், மூடிய கண்கள் மூன்று

**தேங்காய்.**

1114. மொட்டைப் பானையிலிருந்து பூச் சொரிகிறது

**துருவு பலகை.**

1115. மொட்டைத் தட்டிலே, எட்டு பேர் பயணம்

படகு.

1116. மொட்டைத் தலையனுக்கு முடியே, இரட்டை தொப்பி அது என்ன?

பட்டாணி.

1117. மொட்டைப் பாறையில் மூடிய கண்கள் மூன்று அது என்ன?

தேங்காய்.

1118. மேலிருந்தும் வருவான், கீழிருந்தும் வருவான் அவன் யார்?

மழை, கிணற்றி நீர்.

1119. யானை இறந்து ஆறு மாதம் ஆகிவிட்டது, யானைத்தடம் அழியவில்லை

நெல்தாள்.

1120. யானை படுக்க நிழல் உண்டு, கடுகு மடிக்க இலை இல்லை

சவுக்கு மரம்.

1121. யாரும் ஏற முடியாத மரத்தில் ஒரே பிள்ளை பெற்றாள்

வாழை.

1122. யாரும் இறங்காத கிணற்றிலே, அரிச்சந்திரன் இறங்குகிறான்

அகப்பை.

1123. ரத்தம் இல்லாத பூச்சி, உத்தரத்தோட போகுது

புகை.

1124. ராத்திரி பிறந்த பையன், தலைப்பாவுடன் பிறந்தான்

காளான்.

1125. ராசா மகள் பூ இல்லாமல் சடை போட மாட்டாள்

முருங்கை மரம்.

1126. வழியெல்லாம் கூடவே வருவான், வீட்டுக்குள் வரமாட்டான்

செருப்பு.



1127. வரி வரி வண்ணக் கொம்பு, பாடாத முத்துக் கொம்பு

சோளம்.

1128. வரிசைக்கு வரும் முந்தி, வெளியே போகும் பிந்தி

பந்தி இலை.

1129. வரிக்குதிரை ஓடியது, வாய்ப்பாட்டு பாடிய்து

இசைத்தட்டு.

1130. வயிறு இல்லாமலே ஒரு மிடாக் கூழ் குடிக்கிறான்

பாவு.

1131. வந்தும் கெடுக்கும், வராமலும் கெடுக்கும்

மழை.

1132. வளைக்க முடியும் ஒடிக்க முடியாது, அது என்ன?

தலைமுடி.

1133. வரிவரியாய் இருந்தாலும், அணு அணுவாய் இனிப்பான்

கரும்பு.

1134. வல்லவனுக்கு வாலிலும் ஆயுதம் அவன் யார்?

தேள்.

1135. வயிற்றில் விரல், தலையில் கல், அது என்ன?

மோதிரம்.

1136. வண்ண வண்ண பூ, ஓடி ஒளியும் பூ, தலையில் சூடாபூ, என்ன பூ

வண்ணத்துப் பூச்சி.

1137. வளைப்பார் வளைத்தால் வாயு வேகம் அது என்ன?

வில், அம்பு.

1138. வருவான் போவான், வருவது தெரியும் பார்க்கத்தான் முடியாது

காற்று.

1139. வரிக்குதிரை ஓடியது, வாய்ப்பாட்டு பாடியது அது என்ன?

இசைத்தட்டு.

1140. வளைந்து நெளிந்து போனாலும் வழி சொல்வாள், அது என்ன?
**சாலை.**

1141. வயிறு புடைக்கத் தின்றால்தான் நிமிர்ந்து நிற்பான் அது என்ன?
**கோணிப்பை.**

1142. வருத்தமில்லாத சுமை, அது என்ன சுமை?
**குழந்தைச் சுமை.**

1143. வண்ணநிலா விண்ணிலே மலர்ந்திடுவாள், மண்ணிலே அதுஎது?
**அல்லிப்பூ.**

1144. வளரும் போது கருப்பு, வயதான போது வெள்ளை அது என்ன?
**முடி.**

1145. வயிராற உணவு வைத்தால் வளைய வளைய வருவான் யாரவன்?
**நாய்.**

1146. வட்ட வட்ட பொட்டுக்காரன், வாசனை பூச்சுக்காரன், காத்தில் கரைஞ்சிடுவான், அவன் யார்?
**கற்பூரம்.**

1147. வண்ணான் வெளுக்காத வெள்ளை, மழை பெய்யாத தண்ணீர் குயவன் செய்யாத பாண்டம் அது என்ன?
**தேங்காய்.**

1148. வாய் இல்லை பேச, அதனால் வந்தவருக்கு நீதியுண்டு, என்னிடத்தில் நான் யார்?
**தராசு.**

1149. வாயைத் திறந்த வாயாடி, அழுகிறாள், அவள் யார்?
**தண்ணீர்க்குழாய்.**

1150. வானுக்கும், பூமிக்கும் ஒரே கம்பி, வளம் கொழிக்க வைக்கும் கம்பி
**மழை.**

1151. வாலால் தண்ணீர் குடிக்கும், தலையால் முட்டையிடும்
**கத்திரிக்காய்.**



1152. வாரி வாரி வழங்குவான் வெளிச்சம், அதை வாங்கத்தான் ஆளில்லை, அவன் யார்?
**மின்னல்.**

1153. வால் நீண்ட குருவிக்கு, வாயுண்டு வயிறில்லை
**அகப்பை.**

1154. வாயிலே தோன்றி, வாயிலே மறையும் பூ
**சிரிப்பு.**

1155. வாய் இல்லாத பறவை, ஊர் ஊராய் பறக்கிறது
**ஆகாய விமானம் (வான ஊர்தி).**

1156. வாழ்நாள் எல்லாம் வாயை திறந்திருக்கும்
**தபால் பெட்டி.**

1157. வாலினால் நீர் குடிக்கும், வாயால் பூச் சொரியும்
**விளக்கு.**

1158. வாடாத பயிர் என்ன பயிர், அது என்ன?
**அறுகு.**

1159. வாங்காத சுமை என்ன சுமை, அது என்ன?
**கர்ப்பம்.**

1160. வாசலில் பூத்திருக்கும் வாழ்வரசி, அவள் யார்?
**கோலம்.**

1161. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே தம்பி, யார் அந்த தம்பி?
**மழை.**

1162. வாயில்லாப் பிள்ளை ஊர் ஊராய் பறக்குது, அது என்ன?
**ஏரோப்பிளேன்.**

1163. வலைப்பின்னி அதில் அவனே சிறைப்படுவான், அவன் யார்?
**சிலந்திப்பூச்சி.**

1164. விரித்த பாயைச் சுருட்ட முடியாது, அது என்ன?
**கோலம்.**

1165. விதைக்காத விதை மண்ணிலே, அறுக்காத கதிர் மண்ணிலே

**சூரியன்.**

1166. விழுந்தால் படுக்காது, எழுந்தால் நிற்காது

**தஞ்சாவூர் பொம்மை.**

1167. விட்டம் போட்டு வீடு கட்டி, விசிறி மாட்ட இடம் இல்லை

**மூக்கு.**

1168. விருந்துக்கு முந்திடுவாள், வீதிதோறும் கிடந்து அழிவாள்

**பந்தி இலை.**

1169. விடுகதை போடுகிற வேலப்பனுக்கு, முதுகில் மூன்று நாமம்

**அணில்.**

1170. விரிந்த ஏரியிலே, வெள்ளி ஓடம் மிதக்கிறது

**மூங்கில்.**

1171. விதையின்றி முளைக்கும், வேறின்றி வளரும்

**கொம்பு.**

1172. விதையில் கிடைக்காத எண்ணெய், செக்கில் எடுக்காதஎண்ணெய்

**மண்ணெண்ணெய்.**

1173. வில்லை வளைத்தவன் அம்பு வருவதேயில்லை அவன் யார்?

**கண் புருவம்.**

1174. விரிக்காத பாயைச் சுருட்ட முடியவில்லை, அது என்ன?

**கோலம்.**

1175. விழுந்தால் படுக்காது, எழுந்தால் நிற்காது, அது என்ன?

**தஞ்சாவூர் பொம்மை.**

1176. விண்ணைச் சிரிக்கச் செய்வாள், கண்ணை பறிக்கச் செய்வாள்

**மின்னல்.**

1177. விபத்தில்லாமல் வெடிப்பான், காற்றில் சிதறி பறப்பான் அவன்யார்?

**பருத்தி.**



1178. விரிந்த ஏரியில் வெள்ளி ஓடம் மிதக்குது அது என்ன?

**சந்திரன்.**

1179. விரல் இல்லாமலே ஒரு கை, அது என்ன கை?

**உலக்கை.**

1180. வினா இல்லாமலே ஒரு விடை, அது என்ன விடை?

**பணிவிடை.**

1181. விழிக்கும் வரை அமைதிமயம், விழித்துவிட்டால் பிரளயம்

**எரிமலை.**

1182. வீட்டிற்கு ஒரு முரட்டு சிப்பாய் காவல் அது என்ன?

**பூட்டு.**

1183. வீடெல்லாம் நக்கி விட்டு, ஒடுங்கிக் கிடக்குது மூலையிலே

**விளக்குமாறு.**

1184. வீடு நிறைய ஊற்றுப் படை., அது என்ன?

**ஓடு.**

1185. வீடில்லா நகரங்கள், நீரில்லா சமுத்திரங்கள்

**தேசப்படம்.**

1186. வீட்டைச் சுற்றி வேலி, அது என்ன?

**இமை.**

1187. வீட்டுக்கு வந்த தொந்தியப்பன் தினமும் கரைகிறான், அவன்யார்?

**நாட்காட்டி.**

1188. வெள்ளி ரூபாய் துள்ளி விழும், அது என்ன?

**மீன்.**

1189. வெள்ளிக்கட்டி மண்ணுக்குள்ளே, அது என்ன?

**முள்ளங்கி.**

1190. வெறுங்காற்றில் பருத்தவன், வரும் காற்றில் பறந்திடுவான்

**பலூன்.**

1191. வெள்ளைப் பிள்ளையார் கோவிலுக்கு, பூட்டும் இல்லை திறப்பும் இல்லை

முட்டை.

1192. வெள்ளைக்காரன் தோட்டத்திலே, மேலே பச்சை கீழே வெள்ளை

முள்ளங்கி.

1193. வெளுத்த ஆளுக்கு, கறுத்த தலைப்பாகை

தீக்குச்சி.

1194. வெள்ளைக்காரன் பூக்க, வெகுபேர் காத்திருக்கிறார்கள்

சோறு.

1195. வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை, வழியும் இல்லை

கோழி முட்டை.

1196. வெள்ளை கத்திரிக்காய் கள்ளக் கூக்குரல் போடுது

சங்கு.

1197. வெள்ளைக் கோட்டைக்குள்ளே அண்ணன், தம்பி இருவர்

நிலக்கடலை.

1198. வெள்ளைத் துணி போர்த்திருப்பாள் சின்னப் பூவம்மாள்

கொழுக்கட்டை.

1199. வெள்ளப் பிள்ளையார் கோவில் நாய் லொள் லொள் என்று குரைக்கிறது, அது என்ன?

மத்து.

1200. வெள்ளிப் பிசிறு வாயை மூடும், வெயில் வந்தால் கரைந்து ஓடும்

பனி.

1201. வெள்ளை, வெள்ளை சீமாட்டிக்கு விளக்கு எரியுது தலைக்கு மேலே, அது என்ன?

மெழுகுவர்த்தி.

1202. வெளியில் வெள்ளி உள்ளே தங்கம் அது என்ன?

முட்டை.



1203. வெய்யிலிலே மலரும், காற்றிலே உலரும்

வியர்வை.

1204. வெள்ளைத் தண்ணீரிலே, வேசி ஆடுகிறாள்

மத்து.

1205. வெட்ட வெட்ட தொலையாத வீரமணிக் கட்டை

நிழல்.

1206. வெள்ளைச் சட்டைக்காரன் வேடிக்கைக்கு கெட்டிக்காரன்

கண்ணாடி.

1207. வெளிச்சத்தை சுமந்தபடி வீதியுலா வருவான் அவன் யார்?

மின்மினிப்பூச்சி.

1208. வெட்கம் கெட்ட புளிய மரம், வெட்ட வெட்ட வளருது

தலைமுடி.

1209. வெயிலுக்கு காய்வான், தண்ணீருக்கு பொங்குவான்

சுண்ணாம்பு.

1210. வெடித்து சிதறியவன் உடுத்த வேண்டியதை தருவான்

பருத்தி.

1211. வெள்ளை ரோட்டுலே கருப்புக் கார் அங்கும் இங்கும் அலையுது

கண்.

1212. வெந்து கரியாகி விருந்து படைப்பான், அவன் யார்?

விறகு.

1213. வெற்றிலையில் ஐந்து பூ, அது என்ன பூ?

காம்பு. நரம்பு. விளிம்பு. அரும்பு. சுரும்பு.

1214. வெட்டிய பிறகுதான் தெரியும் சிவனுக்கு எத்தனை கண்கள் என்று அது என்ன?

நுங்கு.

1215. வெளியில் இருப்பவனைத் தொட்டால் உள்ளிருப்பவன் அலறுவான், அவன் யார்?

**அழைப்பு மணி.**

1216. வெள்ளை நிறத்தில் கருப்பு விதை போட்டேன், கண்ணால் பார்க்கலாம், கையால் எடுக்க முடியாது, அது என்ன?

**எழுத்து.**

1217. வெள்ளை குதிரை வேலியைத் தாண்டுது அது என்ன?

**சாம்பல்.**

1218. வெளிச்சத்தில் பிடிபட்டவனுக்கு இருட்டில் விடுதலை அவன்யார்?

**போட்டோ.**

1219. வெளியில் விரியும், வீட்டில் சுருங்கும் அது என்ன?

**குடை.**

1220. வேலியைத் தாண்டி வெள்ளைக் குதிரை போய் விட்டது

**பருத்தி.**

1221. வேட்டையாடாத மான், ஆனால் வேடர்கள் நிறைந்த மான்

**அந்தமான்.**

1222. வேறில்லை முளைத்திருக்கு, இலையில்லை கிளையிருக்கு

**மான் கொம்பு.**

1223. வேண்டுதலுக்கு முதல் பலி இவன்தான் அவன் யார்?


**தலைமுடி.**

1224. வேண்டாமென்று வெட்டிவிட்டாலும் வளர்ந்து கொண்டு தான் இருப்பான், அவன் யார்?

**விரல் நகம்.**

1225. வேகமாய் போகிற அம்மணிக்கு, விழுந்ததை எடுக்க நேரமில்லை

**பறவை, சிறகு.**


விடுகதைகள்
சிந்திக்க வைக்கும் புதிய விடுகதைகள்